Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 25 (26.07.2003) சனிக்கிழமை இதழ்: 297

# இடைக்கால நிர்வாக யோசனையை இரகசியமாக வைத்திருக்கமாட்டோம்!

## பிரதமரின் கோரிக்கையை ஏற்க ஜனாதிபதி மறுப்பு



(கொழும்பு)

**வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ள திட்ட வரைபுகளில் பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதால் -**

**திட்டவரைபின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்குமாறு பிரதமர் விடுத்த கோரிக்கையை - நாட்டின் இறமையைப் பாதுகாக்கும் நோக்கில் ஏற்கமுடியாதென, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவுக்கு அறிவித்துள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கும், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட யோசனைகளுக்கும் இடையில் முக்கிய வேறுபாடுகள் உள்ளதைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் மைத்திரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மொழித்தினப் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டம் முன்னணி

### மட்டு.வின்சென்ற் மகளிருக்கு 6 முதலிடங்கள்

நேற்று நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழித் திறன் போட்டிகளில், யாழ்.மாவட்டம் முன்னணியில் உள்ளது.

முதல்நாள் தமிழ்மொழித் தினப் போட்டிகள், நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ்.மத்திய கல்லூரியிலும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில்- 18 முதலிடங்களைப் பெற்று யாழ்.மாவட்டம் முன்னணி வகிக்கின்றது.

அடுத்து 11 முதலிடங்களை, மட்டக்களப்பு மாவட்டமும், 7 முதலிடங்களை, திருகோணமலை மாவட்டமும், தலா 3 முதலிடங்களை வவுனியா, மன்னார் மாவட்டங்களும், 2 முதலிடங்களை முல்லைத்தீவு மாவட்டமும், மற்றும் கல்முனை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் விஜயத்தின் பின்பே திட்டவரைபு குறித்து புலிகள் பதிலளிப்பர்

வடக்கு - கிழக்குப் பகுதியில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகசபைக்கான அரசின் திட்டவரைபு குறித்து, விடுதலைப் புலிகளின் பதில் தற்போதைக்கு வெளியிடப்படமாட்டாது என்று தெரிய வருகிறது.

அரசினால் ஏற்கனவே, விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வெளிநாடு செல்லவுள்ளார்.

தமிழ்ச்செல்வன் வெளிநாடு சென்று திரும்பிய பின்னர், மேற்படி திட்டவரைபு குறித்து- விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிய வருகிறது.

## இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு; மேலதிகமான விளக்கம் வேண்டும்!

### நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பித்தது தொடர்பாக, தற்போதைய நிலை குறித்தும்- அரசாங்கம் தெளிவான பதில் ஒன்றை அளிக்க வேண்டுமென, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் அனுமதியுடன், நேற்று விசேட உரையொன்றை ஆற்றியபோதே - விமல் வீரவன்ச இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை (10 ஆம் பக்கம் பார்க்க)



### வேலைநிறுத்தம் குறித்த மிரட்டலையடுத்து

## கொழும்பு ரயில் நிலையங்களில் இராணுவம், பொலிஸார் குவிப்பு!

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக, அனைத்து ரயில்வே ஊழியர் சங்கங்களும் எச்சரித்ததையடுத்து- நேற்றுமாலை கொழும்பிலுள்ள ரயில் நிலையங்களில் பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர்.

கொழும்பு கோட்டை, மருதானை, தெமட்டக்கொட யாட், இரத்மலானை ரயில் பட்டறை ஆகிய இடங்களில், எந்தநிலையையும் எதிர்கொள்ளும் வகையில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - ரயில்வே பொது முகாமையாளர் அலுவலகம், போக்குவரத்து அமைச்சு ஆகியவற்றுக்கும் நேற்றுமாலை முதல் பாதுகாப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

**வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் போட்டிகளின் முடிவுகள் இரண்டாம் பக்கத்தில்.**

## அமைச்சர் திஸநாயக்கவை பொ.ஐ.மு. இழுக்க முயற்சி!

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இழுக்கும் நடவடிக்கையை அக்கட்சி ஆரம்பித்துள்ளதாக, கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக ஜனாதிபதியின் தூதுவர்களாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மாகாணசபை அமைச்சர் லசந்த அழகியன்ன ஆகியோர் அமைச்சர் திஸநாயக்கவைச் சென்று சந்தித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் போது - அண்மையில் அமைச்சர் திஸநாயக்க திறைசேரியின் செயலருடன் கருத்து முரண்பட்ட சம்பவத்தை ஜனாதிபதியின் தூதர்கள் பெரிதுபடுத்தி, ஐ.தே.முவை விட்டு வெளியேறுமாறு- அமைச்சர் திஸநாயக்கவை கோரினராம். ஐ,தே.மு அரசுடன் முரண்பாடுகள் இருப்பினும் ஒருபோதும் ஜனாதிபதி சந்திரிகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பெண்களுடன் சேஷ்டை

## பொலிஸ் உத்தியோகத்தரது மகன் புலிகளால் எச்சரித்து விடுதலை!

(வவுனியா)

வவனியா - குருமன்காட்டுப் பகுதியில், இளம் பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட முயன்ற வவுனியா பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மகனை, விடுதலைப் புலிகள் எச்சரித்து விடுவித்துள்ளனர்.

வவுனியாவில் கடமைபுரியும் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவரின் மகன், கடந்த சில நாள்களாக குருமன்காட்டுப் பகுதியில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்ததுடன், பெண்களுடனான சேஷடைகளிலும் ஈடுபட்டுவந்தார்.

இது குறித்து மக்கள் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் குறிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளையில் ரொக்கெட் லோஞ்சர்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவப் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து, ரொக்கட் லோஞ்சர் ஒன்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்த ரொக்கட் லோஞ்சரின் மூலம் 61 மில்லிமீற்றர் S ரகத்தைச் சேர்ந்த குண்டுகளை இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு செலுத்தித் தாக்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரொக்கட் லோஞ்சர் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக, பிரபல வர்த்தகர் ஒருவரை, பதுளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். தான், யாழ்ப்பாணம் சென்றவேளையில், ரொக்கட் லோஞ்சரை கொண்டு வந்ததாகப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அந்த வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

குறித்த ரொக்கட் லோஞ்சர் இராணுவத்தினர் பயன்படுத்தியதா என்பது குறித்து, பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.



இணையத்தளத்தில்...
நமது ஈழநாடு
www.eezhanadu.com

EXPO Aviation எக்ஸ்போ
Expo Aviation (Pvt) Ltd.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -1139)

# வட-கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டியின் இறுதி முடிவுகள், நேற்று இரவு வெளியிடப்பட்டன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு-

**வாசிப்பு**

**பிரிவு - 1**

குஹாஷினி சிவனேசராஜா (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசியப் பாடசாலை), மா.நாகவதனி (யாழ். தந்தைசெல்வா தொ.நி. பாடசாலை), எச்.றுஸ்தியா (கல்முனை அல்மனார் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 2**

சதுர்த்திகா யோகநாதன் (மட்டக்களப்பு வின்சன் உயர்தரப் பாடசாலை), ம.ஜெனிற்றா (கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயம்), கே.நிவேகா (மன்னார் இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை), க.பிரியங்கா திருகோணமலை புனித மரியாள் கல்லூரி,

**ஆக்கத்திறன்**

**பிரிவு - 1**

யோ.ஜனனி (வவுனியா குமாங்குளம் சித்தி வித்தியாலயம்), எம்.எச்.சன்பறா (கல்முனை அல் - ஹிலால் வித்தியாலயம்), த.தக்சனா (திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியர் மகாவித்தியாலயம்),

**பேச்சு**

**பிரிவு - 1**

ஜெ.ஜெயமாருதி (கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), சானுஜா சிதம்பரமூர்த்தி (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசியப் பாடசாலை), ம.கரோலின் சேரா (யாழ். சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

**பிரிவு - 2**

ம.வைதேகி (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), ஆர்.எவ்.றிபா (மன்னார் அல்-அஸ்கர் மகா வித்தியாலயம்), வை.சுமித்திரா (கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்),

**பிரிவு - 3**

வி.விஜயதர்சிகா (மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), கிருத்திகா கணேசலிங்கம் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசலை), சி.அபிராமி (திருகோணமலை புனித.மரியாள் கல்லூரி), தெ.துர்க்காஜினி (வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 4**

துரையப்பா கிரோஜன் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி), சி.கஜேந்தினி (யாழ். வடஇந்து மகளிர் கல்லூரி), எம்.எம். பாத்திமா நஸீஹா (கல்முனை ஆயிஷா பா.ம. வித்தியாலயம்),

**பிரிவு - 5**

ம.ஜெறோம் (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), வி.வினுஜா (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), எம்.ஐ.எம்.றிஸ்னி (கல்முனை அல்-அஷ்ரக் ம.வித்தியாலயம்),

**பாவோதல்**

**பிரிவு - 1**

ஏ.ஜி.எவ். சம்ஹறா (கல்முனை அல்-மனார் வித்தியாலயம்), கி.கோகுலரமணன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இ.றுக்சிக்கா (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 2**

ம.துளசி (யாழ். வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), மா.ஷயுக்ஷினி (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), பா.சுகிர்தா (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**பிரிவு - 3**

தர்மினி எதிர்மன்னசிங்கம் (மட்டக்களப்பு வின்சர் மகளிர் உயர்தரப பாடசாலை), ஆரம்யா (கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் மகா வித்தியாலயம்), பு.அமிர்தன் (திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி).

**பிரிவு - 4**

சி.கஜானி (மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலை), பே.புஷபனா (யாழ். மகாஜனா கல்லூரி), ச.யயந்தன் (திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி).

**பிரிவு - 5**

தெ.தஷிகா (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பாலசிங்கம் கிஸ்ணவேணி (மட்டக்களப்பு தேத்தாத்தீவு மகா வித்தியாலயம்), கே.ரஸ்மிலா (கல்முனை அல்-மனார் ம.கல்லூரி), மெ.லிசாந்தினி (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

**இசையும்**

**பிரிவு - 1**

தர்ணிஷா ஷியாம்சுந்தர் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயாதர பாடசாலை), செ.றெஜிமோகன் (வவுனியா பூந்தோட்டம் அ.த.க.பாடசாலை), சி.கீர்த்திகா (திருகோணமலை ஸ்ரீ சணமுகா வட.இந்து மகளிர் கல்லூரி).

**இசை (தனி)**

**பிரிவு - 2**

ச.சங்கீதா (யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி), த.தர்ஷாந் (திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி), கு.ரா.ஸ்ரெல் ஜெபசாந் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி).

**பிரிவு - 3**

ர.சுரசாகித்தியன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி), க.சிந்தூரி (திருகோணமலை உவர்மலை விவேகாணந்தாக் கல்லூரி), கருணாநிதி தனஞ்ஜெயன் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி).

**பிரிவு - 4**

ஸ்ரீ.சிவஞ்சினி (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), ஜெ.வைஷ்ணவி (யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), கை.குலரூபா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**

ம.தயாபரன் (யாழ். மத்திய கல்லூரி), ப.யசிந்தரன் (வவுனியா விபுலானந்தா மகா வித்தியாலம்), கி.சற்குருவேணு (மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை).

**இசை (குழு I)**

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, கல்முனை அக்கரைப்பற்று சிராஜ் வித்தியாலயம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**இசை (குழு II)**

யாழ். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், திருகோணமலை சணமுகா இந்து மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்.

**நடனம் (தனி)**

**பிரிவு - 1**

கு.நாரணி (மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்), மா.மாதுரி (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), பா.ஜஸ்திகா (யாழ். ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்).

**பிரிவு - 2**

தே.விதுர்ஷன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), கி.பிரதீகா (வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வி.), ச.நாகதர்சினி (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**பிரிவு - 3**

ர.மதுமதி (மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலை), பா.அனுசன் (யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்), பி.பிறேமசிறீதரன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**பிரிவு - 4**

கு.மயூரி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), வி.திவ்வியா (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி), சி.சுகாநந்தி (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 5**

எலிசபேத் சுபத்திரா (யாழ். வேமபடி மகளிர் கல்லூரி), பெ.பேபிசர்மிளா (திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), ஜெ.கயல்விழி (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**நடனம் (குழு 1)**

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு புனித சிசிலிய பெ.தே.பாடசாலை.

**நாட்டிய நாடகம்**
**(திறந்த போட்டி)**

யாழ். இராமநாதன் கல்லூரி , மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

**நாடகம் (திறந்த போட்டி)**

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம்.

**வில்லுப்பாட்டு (திறந்த போட்டி)**

யாழ்.யாழ்ப்பாணக் கல்லூரி, திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு தேத்தாத்தீவு மகா வித்தியாலயம் வவுனியா விபுலானந்த மகா வித்தியாலயம்.

**விவாதம் (திறந்த போட்டி)**

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், அக்கரைபற்று முஸ்லிம் மகளிர் கல்லூரி.

**தமிழறிவு (திறந்த போட்டி)**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, கல்முனை ம.்.மூத் மகளிர் கல்லூரி.

**முஸ்லிம் நிகழ்ச்சி**
**(திறந்த போட்டி)**

எம்.எம்.பாத்திமா (றிஸ்பானா கல்முனை அஸ்-ஸிராஜ் மகா வித்தியாலயம்), அப்துல் அலீம் முகமட் மஸீ மட்டக்களப்பு அல்-ஹிரா வித்தியாலயம்), எம்.எம்.முர்சித் (திருகோணமலை அல்-அக்ஷா மகா வித்தியாலயம்).

**சிங்கள நிகழ்ச்சி**
**(விசேட பிரிவு 1)**

பி.ஆசிர சமரநாயக (திருகோணமலை திஸ்ஸ மகா வித்தியாலயம்), ஆர்.எம்.லக்ஷிகா ஷயாமலி (வவுனியா மூன்றுமுறிப்பு அ.சி.க. பாடசாலை).

**விசேட பிரிவு - 2**

ஏ.எம்.பி.துலான் சமீர (வவுனியா திஸ்ஸ மகா வித்தியாலயம்), சோமபாலகே சுமத் பிரசன்ன (வவுனியா காமின மகா வித்தியாலயம்).

**வீணை**

**பிரிவு - 2**

வினுஜா குகதாஸ் (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), சி.அபயன் (யாழ். இந்துக்கல்லூரி), ச.கிருத்திகா (வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்).

**பிரிவு - 3**

உ.சகாணா (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி), 'பூர்ணிமா ஸ்ரீதரன் (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), எ.தர்மினி (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு - 4**

தி.காயத்திரி (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி), லஷிதா தேவராஜா (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), பி.மினோஜி (மட்டக்களப்பு வினசன் மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு - 5**

பா.கஸ்தூரி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தி.சோபனா (வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்).

**வயலின்**

**பிரிவு - 2**

அகுஸ்தீன் அமலறோயன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), அ.இவாஞ்சலின் தாமிரா (மடடக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை), ஜெ.ஹம்ஸவதி (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

**பிரிவு - 3**

சே.சகிஷ்ணா (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி), த.பிருந்தன் (திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி), இ.ஜெயகிருஷ்ணன் (யாழ். இந்துக் கல்லூரி).

**பிரிவு - 4**

ச.ஜெனார்த்தனி (வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்), ஜெ.வைஷணவி (மானிப்பாய் மெமோறியல் ஆரம்பப் பாடசாலை), தே.இந்துஜா (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு - 5**

கிரித்திகா அருள்ஜோதி (மட்டக்களப்பு வின்சன் உயர்தரப் பாடசாலை); இ.அபிராமி (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), க.பிரார்த்தனா (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி).

**புல்லாங்குழல்**

**பிரிவு - 3**

விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**பிரிவு - 4**

பா.ஐங்கரன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 5**

த.தனேந்தினி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

# முல்லை கரையோரக் கிராமங்களில் இருநூறு மலசலகூடங்கள் அமைப்பு!

எக்கோ, கெயர் நிறுவனங்களின் நிதியுதவியுடன், முல்லைத்தீவு மாவட்டக் கரையோரக் கிராமங்களில் 200 மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென மேற்படி நிறுவனங்களால், சுமார் 73 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலசலகூடங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு நலன்புரிக்கழகம் அமைத்துக்கொடுத்து வருகிறது.

முதற்கட்டமாக 12 மலசலகூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய 188 மலசலகூடங்களும் - இந்த வருட முடிவுக்குள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# சீனாவுக்குச் செல்லும் பிரதமர் ரணில் 5 ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவார்!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- அடுத்த மாதம் இரண்டாம் வாரம் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்தமாதம் எட்டாம் திகதி சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ள பிரதமர் - அங்கு ஒருவாரம் தங்கியிருப்பார்.

இதன்போது, அவர் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில், சீனாவுடன் ஐந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார்.

அத்துடன், சீன ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

**பேருந்து உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவம்**

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக வடமராட்சிப் பாடசாலைகளின் தேவைகளுக்கும், பொதுவான இந்துசமய வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்துவதற்காக கௌரவ இந்து கலாசார அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன் அவர்களால் வதிரி கரவெட்டி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 50 இருக்கைகளைக் கொண்ட பேரூந்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 27.07.2003 ஞாயிறு காலை 9 மணிமுதல் 10 மணிவரையில் எமது ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வடமராட்சியில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்து சமய அமைப்புக்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தாக்கள் சபை,
ஸ்ரீ பரமானந்த சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமம்

வதிரி,
கரவெட்டி,
தொ.பே.இல.021-2263136 (சி-1263)

THE ROYAL COLLEGE OF JAFFNA
**Spoken English with Grammar**
N.Vigneswaran Archery,
Black Road, Chankanai
426, (302) K.K.S. Road
Jaffna. (சி-1157)

**சிறு விளம்பரம்**

**நாய்க்குட்டிகள் விற்பனை**

நல்ல இன 4 மாதம், 6 மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (429)

திறஞ்சனாஸ் சங்கானை
கரன், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்.
THE MUMMY
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்

10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)
இயக்கம்: விக்ரமன்

**வேலையாட்கள் தேவை**

கோழிப்பண்ணைக்கு வேலை ஆட்கள் தேவை ஊக்கமாக வேலை செய்பவர்களுக்கு நல்ல சம்பளமும், உணவும் தரப்படும். தங்கியிருத்தல் வேண்டும். உடன நேரில் வரவும்.

தனபாலசிங்கம்
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி, நல்லூர். (423)

# கொழும்பு பெண்கள் பாடசாலை சுவர்களில் தகாத வார்த்தைகள்!

## தட்டிக்கேட்ட பொலிஸைத் தாக்கினார் அமைச்சர் மகன்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையொன்றின் சுவரில் - தற்போதைய அமைச்சரவையில் முக்கிய பதவிவகிக்கும் அமைச்சர் ஒருவரின் மகன் உட்பட ஒரு குழுவினர், தகாத வார்த்தைகள் எழுதியுள்ள தாகக் கறுவாக்காட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த கறுவாக்காட்டுப் பொலிஸார் - அதனைத் தடுக்க முற்பட்டபோது, இளைஞர் குழுவினர் தாக்கியதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் பின்னர் - தலைமறைவாகியிருக்கும் குறிப்பிட்ட அமைச்சரின் மகனைக் கைதுசெயவதற்காக, பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர், ஏற்கனவே கொழும்பிலுள்ள ஹோட்டேல் ஒன்றுக்கு முன்னால், சந்தேகத்திற்கு இடமானமுறையில் நடமாடியபோது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி உரையை பிற்போட்டதற்கு திட்டவரைபு முரண்பாடு காரணமல்ல!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்டவரைபில், வேறுபாடுகள் எதுவும் இருக்கவில்லையென, அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் -

இருதரப்புக்கும் அனுப்பப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டவரைபில் - 'கமா'க்களும், முற்றுப்புள்ளிகளும் மாறியிருக்கலாமே தவிர, பெரியளவிலான எந்தவொரு மாற்றங்களும் அவற்றில் இருக்கவில்லையெனத் தெரிவித்தார்.

இரு தரப்புக்கும் சமர்ப்பிக்கப்பட்ட திட்டவரைபுகளில், பெரியளவில் மாற்றங்கள் இருப்பதாக வெளியான செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

இந்தத் திட்டவரைபுகளில் - ஒருதரப்புக்குத் தெரியாமல், மற்றத்தரப்புக்கு நாங்கள் எதையும் மறைக்க விரும்பவில்லை. எப்படியிருந்தாலும், இந்தத் திட்ட வரைபுகளில் கூறப்பட்ட விடயங்கள் - ஒருநாள் வெளிச்சத்துக்கு வந்தே ஆகும், எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி - தனது நாட்டு மக்களுக்கான உரையைப் பிற்போட்டதற்கு, அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால திட்டவரைபில் சில முரண்பாடுகள் இருந்ததே காரணம் எனக் கூறப்பட்ட செய்திகள் பற்றிக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ் -



தனிப்பட்ட ரீதியாக எவருக்கும், எந்த விடயத்தையும் நாங்கள் மறைக்கவில்லை எனவும், போர்நிறுத்தத்தை எவ்வாறு கையாள்கிறோமோ, அதேபோலவே இடைக்காலத் திட்டவரைபையும் அரசாங்கம் பகிரங்கமாகக் கையாள விரும்புகிறது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட இடைக்காலத் திட்டவரைபின் திருத்தங்களை உள்ளடக்கிய இறுதி ஆவணத்தைப் பார்வையிடுவதற்கு விரும்பினால், அதனையும் தாங்கள் கையளிப்பதற்குத் தயாராக இருப்பதாகக் கூறிய அமைச்சர் பீரிஸ் -

எவ்வாறிருந்தாலும் - விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் நேருக்குநேர் கலந்துரையாடும்போதே, இடைக்காலத் திட்டவரைபு முழுமையான வடிவத்தை அடையுமெனக் கூறினார்.

இதேவேளை -

விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற அடுத்தகட்டப் பேச்சுக்களில் - போர்நிறுத்தம் பற்றிய விடயங்களும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் பற்றியும் ஆராயப்படும் எனவும், அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தார்.



சட்டவிரோதமான முறையில் இலங்கையூடாக இத்தாலிக்குச் செல்ல முயன்றபோது, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# பிரிட்டிஷ் விஸாவுக்கு கைவிரல் அடையாளம்; லண்டனில் மனித உரிமை அமைப்பு எதிர்ப்பு!

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு விஸாபெற்றுச் செல்பவர்கள், தமது கைவிரல் அடையாளங்களைப் பதிந்து, விஸாவிற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டுமென - பிரிட்டன் அரசாங்கம் அறிவித்துள்ள புதிய நடைமுறைக்கு எதிராக, மனித உரிமைவாதிகள் கண்டனம் எழுப்பியுள்ளனர்.

லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையில் பணியாற்றுகின்ற பந்துல ஜெயசேகர, இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்-

தமது அமைப்பு இவ்விடயம் தொடர்பாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கவிருப்பதாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு கைவிரல் அடையாளங்களைப் பதியும் நடைமுறை, விஸாவிற்கு விண்ணப்பிப்பவரிடம் உளவியல் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் -

இந்த நடைமுறை - பிரிட்டனுக்குள் கௌரவமாக உள்நுழைய விரும்புபவர்களின் நிலைப்பாட்டைப் பெருமளவுக்குப் பாதிக்கும் எனவும் பந்துல ஜெயசேகர மேலும் தெரிவித்தார்.

பிரிட்டன் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள இந்தப் புதிய விதி - இலங்கையிலேயே பரீட்சார்த்தமாக அமுலாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகப் பேச்சில் தனிக் குழுவாக முஸ்லிம்கள்!

## முஸ்லிம் எம்.பிக்கள் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் இடைக்கால நிர்வாகம் மற்றும் இறுதித்தீர்வு தொடர்பான பேச்சுக்களில், முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கு பற்றுவது என்று, வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின், ஒன்றிணைய உபகுழு தீர்மானித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற மேற்படி உபகுழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து, முஸ்லிம்களுக்கு என்று பொதுவான தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

சமாதானப் பேச்சுக்களின்போது, இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், அத்துடன் இறுதித்தீர்வு தொடர்பான முழுமையான பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டும் என்றும், இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# இரசாயன கற்கைநெறிக்கு மாணவர் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில், இரசாயனவியல் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, இரசாயனக் கற்கைக்கான வாய்ப்புக்களை - கொழும்பிலுள்ள இரசாயனக் கற்கைகளுக்கான நிலையம் (The college of Chemical sciences of the Institute of chemistry) வழங்க முன்வந்துள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு - முடிவுகளுக்காகக் காத்திருக்கின்ற மாணவர்கள் - இதற்கு விண்ணப்பிக்கலாமென - அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற விரும்புபவர்கள் 120/10, விஜயராம மாவத்தை, கொழும்பு அல்லது 39, சுமணராம வீதி, கல்கிசை - எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

# உயர்தரப் பரீட்சை முடிவுகளுடன் பாடப்புள்ளிகளும் வெளிவரும்!

## புதிய நடைமுறை இந்த ஆண்டு முதல்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு - அவர்கள் தோற்றும் பாடங்களில், அவர்கள் பெறும் புள்ளிகள் இந்த வருடத்திலிருந்து - தனித்தனியாக வெளியிடப்படும் - என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கு முந்தைய வருடங்களில் 'Z' முறை அடிப்படையில்தான் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்பட்டன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் எடுத்த புதிய தீர்மானத்தின்படி - 'Z' முறையில் பெறப்பட்ட புள்ளிகள், அந்தந்தப் பாடங்களுக்குரிய புள்ளிகள், தரம் என்பவற்றினை உள்ளடக்கியே மாணவர்களுக்குப் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுக்கு இணங்கவே, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த வருடத்திலிருந்து இது நடைமுறைக்கு வருமென, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே நடத்தும் சுற்றுப்போட்டியில், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு, வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.










யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையமும் யுனெஸ்கோ நிறுவனமும் இணைந்து நடத்தும் ஊடகவியலாளர்களுக்கான தொடர் பயிற்சித் திட்டத்தின் முதலாம் நாள் நிகழ்வில், 'தினக்குரல்' பத்திரிகை பிரதம ஆசிரியர் சிவனேசச்செல்வன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், 'ஊடக மடல்' என்னும் கையேட்டினை, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வெளியிட - வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், 'நல்ல அரச நிர்வாகம்' என்னும் கையேட்டை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் வெளியிட - பேராசிரியர் சிற்றம்பலம் பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்மராசிக்கு கடந்த 23 ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப் படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**





## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதம்)

உங்களில் பலருக்குத் தர்சமயம் உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருக்கும். மனைவியே உங்கள் குலச்சொத்து. ஆனால், குருபகவானின் சாரம் உங்களுக்குச் சாதகமாக இல்லை. எனவே, பிற பெண்களால் வரும் அவமானத்தைத் தடுக்க, மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளுங்கள். இந்த குருபெயர்ச்சி பல நஷ்டங்களைக் கொடுக்கக் காத்திருக்கின்றது.

உங்கள் போக்கே மாறுபடும். இதனால், தந்தையாரின் மனநிலை பாதிப்படையும். ஆடி மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் எந்த விடயத்திலும் கவனமாக இருங்கள். நண்பர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்களால் ஏமாற்றப்படலாம். எச்சரிக்கையோடு வாழ்வினை நடத்தி, முன்னேறுங்கள்.

கலைகளில் சிறந்து விளங்குவீர்கள். திடமான உடல் ஆரோக்கியம் உண்டு. நீசத்தனமான நட்பு - அதிகமான விரயங்களை உண்டாக்கும். வாக்கு சிலசமயங்களில் கடுமையாகும். செயல்களில் மிக மிக நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தானத்தில் சிறந்தது நிதானம் என்பதனை உணரவேண்டும். மற்றவர்களுக்கு முன்னின்று பணம் வாங்கித் தருவதோ, மற்றவர் கடனுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்பதோ, பிணைக் கையெழுத்துப்போடுவதோ அறவே ஆகாது. வாரிசுகளின் நலனில் கவனம் கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் ஒதுங்கி இருக்கவேண்டும். நேரம் மோசமாக இருக்கின்றது. இன்னும் ஓராண்டு அமைதியைக் கைக்கொள்ளுங்கள். எந்த அணியிலும் சேரவேண்டாம். அரசு அதிகாரிகள் கவனத்துடன் பணி செய்யவேண்டும். மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகித் துன்பப்பட நேரிடலாம்.

தேவையற்ற மாறுதல்கள் மனத்துன்பத்தை அதிகரிக்கும். திருமண காரியங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. பூர்வீகச் சொத்துக்கள் விரயமாகும். அதன் மீது கடன் ஏற்பட்டு, வில்லங்கம் வளரும்.

மாணவ மணிகளே! நீங்கள் ஆழ்ந்து கவனித்து, கற்று முன்னேற வேண்டும். தொழில் அதிபர்களுக்குப் புதிய தொழில் முயற்சிகள் அறவே வேண்டாம். ஏழரைச்சனி விலகட்டும்.

சாரதிகள் தெய்வ வழிபாடு, மித வேகம் இவற்றால் விபத்தைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

குடும்ப வாழ்வில் கணவன்-மனைவிக்கு இடையே சச்சரவு தோன்றலாம் 'கோபம் தவிர்' என்ற தொடரை மனதில் கொள்க.

விவசாயிகள் கருத்துடன் இருந்தால்தான், பயிர் தரும் பலனைப் பெறமுடியும். சோம்பலை விரட்ட வேண்டும். பேச்சாற்றலும், தர்ம நீதி சாஸ்திரங்களில் ஆர்வமும் பெருகும். சிலருக்கு முகத்தில் கட்டிகள், பருக்கள் தோன்றும். சிலர் இளமையிலேயே கண்ணாடி அணிய வேண்டி ஏற்படும்.

மாமிசம், மதுபானம் இவற்றைத் தவிர்க்கவேண்டும். எழுத்தாற்றல் பெருகும். சுவையாக எழுதுவீர்கள். உங்கள் எழுத்தில் உண்மை மிளிரும். தந்தையாரின் உடல் நலம் பாதிக்கப்படும். சிலருக்கு நாஸ்திக புத்தி ஏற்படும்.

பெரியோர்களையும், ஆசிரியர்களையும், அறிவில் சிறந்தவர்களையும் . உதாசீனப்படுத்தும் மனப்பான்மை தோன்றும். ஆனால், அதிகாரத்திற்கு ஒரு குறையும் இருக்காது. உற்றார், உறவினர்கள் பகையாக இருப்பார்கள்.

சிலர் - சகோதர சகோதரிகளின் ஆதரவில் காலம் கழிக்க வேண்டியிருக்கும். சிலருக்கு இளைய சகோதர சகோதரிகளின் வழியாகச் சொத்துக்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டாகும்.

இந்த ராசி பெண்கள் - திருமண முயற்சிகளில் ஈடுபட்டால், தடங்கலே ஏற்படும். சற்றுப் பொறுத்திருக்கத்தான் வேண்டும். காதல் விவகாரங்கள் வேண்டவே வேண்டாம். அது பாதாளத்தில் தள்ளிவிடும். அறிமுகமான பெண்களை நம்பிக்கூட அவர்களுடன் தனியாகச் செல்ல வேண்டாம். உங்களுக்கு இந்த குருபெயர்ச்சி நன்மையைத் தராது. ஆடை, ஆபரணம் ஓரளவு சேரும். மிகப்பெரிய வருமானம் கிடைக்காது. கணவருடன் கோபிக்க வேண்டாம். ஆத்திரத்தை அடக்குங்கள்.

**ஆடி**

உங்கள் வாழ்வில் பொய் கலக்கும். கடும் சொற்களால் மற்றவர்களை அலறச்செய்வீர்கள்.

**ஆவணி**

உங்கள் மனோதிடம் பெருகும். உடல் ஆரோக்கியம் சிறக்கும். வாக்கு வன்மை திழைக்கச் செய்யும்.

**புரட்டாதி**

மனத்துன்பங்கள் பெருகி நிம்மதியைக் கெடுக்கும். உறவுகள் பகையாக மாறும். உங்கள் தாயாரைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய மாதம் இது.

**ஐப்பசி**

உங்கள் மக்களுக்கு, குறிப்பாக ஆண் மக்களுக்கு இது ஆகாதகாலம். அவர்களுக்குச் சௌகரியங்கள் குறையும்.

**கார்த்திகை**

உங்கள் புகழ் இந்த மாதத்தில் ஓங்கிச் சிறக்கும். நல்ல யோகங்கள் இம்மாதத்தில் தேடிவரும். பகைவரை வென்று ஜெயக் கொடி நாட்டும் மாதம். 12 மாதங்களுக்குள் இது உங்களுக்கு ஒளிவிளக்கான மாதம்.

**மார்கழி**

உடல் நலம் கெடும். மனம் அலைபாய்ந்து, வேலிதாண்ட எண்ணும். அகலக்கால் வேண்டாம். தகாதசேர்க்கை உங்கள் உள்ளத்தையும், உடலையும் கெடுத்துவிடும்.

**தை**

கண்களில் நோய் தோன்றும். வீண் மனஸ்தாபங்கள் தோன்றலாம். சூரிய நமஸ்காரம் அவசியம்.

**மாசி**

அறச்செயல்களில் மாற்றம் இருக்கும். அறக்கொடைகள் செய்யத் தூண்டுதல் உண்டாகும். கோபம் உண்டாகும்.

**பங்குனி**

தொழில்வளம் பெருகும். தேகம் திடம் பெறும். புகழ் ஓங்குவதற்கு வாய்ப்பு உண்டாகும். செல்வச் செழிப்பு உண்டாகும். பாலைவனத்து ஊற்றுப்போல இருக்கும்.

**சித்திரை**

துன்பங்களுக்கு இது விடிவு காலம். உங்கள் ஆயுள் நீடிக்கப் படுகின்றது. ஆனால், தந்தையாரின் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். அவர் தலை, கண்கள் இவற்றுக்கு தக்கமருத்துவம் செய்யுங்கள்.

**வைகாசி**


உங்கள் மனதிடம் அளவுக்கு அதிகமாகப் பெருகும்.

**ஆனி**

சுகங்கள் பெருகும். முன்கோபத்திற்கு ஆளாகாதீர்கள். உங்களின் வீரம், ஆச்சாரம் பெருகும்.

(சிம்மராசி நாளை தொடரும்)



அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் 'தெணியானின்' மணிவிழா மற்றும் மலர் வெளியீட்டு விழாவில் - தெணியானுக்கு பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.திருநாவுக்கரசு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (17)

# மருதங்கேணி ஐஸ் தொழிற்சாலை; கனவுதானா என மீனவர் கவலை!

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதற்கு - 2 கோடியே 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொழிற்சாலை அமைப்பதற்கான அரச காணியும், பிரதேசசெயலரினால் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கப்பட்டது.

ஆனால், இதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது குறித்து, இப்பிரதேச கடற்தொழிலாளர்கள் - பிரதேசசெயலரிடம் முறையிட்டுள்ளனர்.

போக்குவரத்து வசதி குறைந்த மருதங்கேணிப் பிரதேசத்தில், உற்பத்தி செய்யும் மீன்களைச் சந்தைப் படுத்துவதற்கு, ஐஸ் தொழிற்சாலை மிகவும் இன்றியமையாததாகும். தற்போது கொழும்பிலிருந்து வரும் கூலர் வாகனங்களிலேயே, சிறிதளவு ஐஸ் கொண்டுவரப்படுகின்றது.

மேலும், இப்பிரதேசத்தில் சிறான் அமைப்பினுடாகவே ஐஸ் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருந்தது. சிறான் அமைப்பு தற்போது செயலிழந்து இருப்பதனால், ஐஸ் தொழிற்சாலை அமைக்கும் பணிகளும் பாதிப் படைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. (122)

# வைத்தியரின் அனுமதியின்றி வீடு செல்லும் நோயாளிகள்!

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளில் பலர் - வைத்தியர்களால், வீடுசெல்ல அனுமதிக்கப்பட முன்னரே, களவாகத்தப்பி, வீடுசென்று விடுவதாகத் தெரியவருகிறது.

இதுபோன்ற பலமுறைப்பாடுகள், யாழ்.போதனா வைத்தியசாலையின் பொலிஸ் பிரிவுக்குத் தினமும் கிடைத்து வருகின்றன.

குறிப்பாக - சிறுவிபத்துகளுக்காளாகி, விடுதிகளில் அனுமதிக்கப் பட்டுவரும் பலர் - சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையைப் பெறவேண்டிய நிலையில் -

அந்த வைத்திய அறிக்கைக்குக் காத்திராது, வெளியேறி வருகின்றனர்.

இதனால், போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்குப் பல சிக்கல்களும் ஏற்பட்டு வருகின்றன.

## மஹாபொல சான்றிதழ்கள்

யாழ்.பல்கலைக்கழக 2002/2003 கல்வியாண்டுக்கான மஹாபொல புலமைப்பரிசிலுக்குத் தகுதிபெற்று, கடந்த மே மாதம் 31 ஆம் திகதியன்று நடைபெற்ற பரிசில் வழங்கும் வைபத்தில், தமது சான்றிதழ்களைப் பெறத்தவறிய மாணவர்கள், மஹாபொல புலமைப்பரிசில் சான்றிதழ்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையுடன் தொடர்புகொண்டு, பெற்றுக் கொள்ளுமாறு உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ள கோரிக்கை


சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் - கீழ்க்குறிப்பிட்டவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

பரம்சோதி உதயா (உடுவில் கிராமசபை அகதிகள் முகாம், மருதனார்மடம், சுன்னாகம்), யூட் மரிய பீரிடா (கற்குளம் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்), அருளப்பு மேரி அனிற்றா (F-9, குருநகர் தொடர் மாடி, யாழ்ப்பாணம்), செல்வம் குணம் (5, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்), நடராஜா லூர்த்தம்மா (இணுவில் கிழக்கு, இணுவில்), திருமதி கந்தையா சின்னப்பிள்ளை (சுன்னாகம் தெற்கு சுன்னாகம்) ஆகியோரையே தம்முடன் தொடர்புகொள்ளுமாறு, சர்வதேச செஞ்சிலுவைக் குழு அறிவித்துள்ளது.

# சிறு தகவல்கள்

**நீர்மூழ்கிக் கப்பல்**

கடலின் அடியில் மூழ்கிச்சென்று பயணத்தை மேற்கொள்ளவும், தாக்குதல்களை நடத்தவும் வல்ல போர்க்கப்பலான நீர்மூழ்கிக் கப்பல் (Submarine) - ஹொலன்ட் நாட்டவரான, கோர்ஸைஸ் டிரிபெல் என்பவரால் 1624 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.



இந்த நீர்மூழ்கிக் கப்பல் - தேம்ஸ் நதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது. வெள்ளோட்டத்தின்போதே, பல மணி நேரம் இந்த நீர்மூழ்கி நீருக்குள் பயணம் செய்தது.

**நங்கூரம்**

முதன் முதலாக சீனர்களும், எகிப்தியர்களுமே நங்கூரங்களைப் பயன்படுத்தினார்கள். பின்னர் கிரேக்கர்களும், ஐரோப்பியர்களும் மண் மூட்டைகளை, கல்லுமூட்டைகளை நங்கூரம்போலப் பயன்படுத்திக் கப்பல்களைக் கடலில் நிறுத்தி வந்தனர்.

கடல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த தமிழர்களும், நங்கூரத்தின் பயனை அறிந்திருந்தார்கள். பிளினி, ஸ்ட்ரோபோ போன்ற ரோமானிய வரலாற்றாசிரியர்கள் - கடலோடிகளான பல்வேறு இன மக்களும் பயன்படுத்திய நங்கூரங்களைப் பற்றி, தமது குறிப்புக்களில் கூறியுள்ளனர்.

பல வகை நங்கூரங்களையுடைய ஒற்றைச் சிறு நங்கூரம் - கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாவனைக்கு வந்திருக்கிறது. இதுவே பின்னர் செம்மைப்படுத்தப்பட்டு வந்தது. 1770 இல் இரும்பினால் நங்கூரங்கள் புதிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்டன.

1821 ஆம் ஆண்டு - ஹவ்கிள்ஸ் என்ற இங்கிலாந்து நாட்டவர், இலகுவான இன்னொரு நங்கூரத்தை வடிவமைத்தார். இது முன்னைய நங்கூரங்களைப் போலல்லாது, நீரினுள் விழுந்து பலத்துடன் நிலத்தில் பிடிப்புடன் இருந்தது.

1882 இற்கும் 1887 இற்கும் இடையில் - இந்த நங்கூரத்தில் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இப்போதுள்ள நங்கூரத்தை, 1933 ஆம் ஆண்டில் டெய்லர் என்பவர் வடிவமைத்தார்.

**நுணுக்குக்காட்டி**

16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் - ஹொலண்டில், மைக்ரோஸ்கோப் என்ற நுணுக்குக்காட்டி உருவாக்கப்பட்டது. இதை ஜேஜார்சன் என்பவரும், அவரது மகனான சக்காரியஸ்ஸும் இணைந்து உருவாக்கினார்கள்.

1609 ஆம் ஆண்டில் - கலிலியோ என்ற விஞ்ஞானி செய்த ஆராய்ச்சியின் அடிப்படையிலேயே, இவர்கள் நுணுக்குக்காட்டியை உருவாக்கினார்கள்.

ஒருபொருளை, இரு நூறு மடங்காகப் பெருப்பித்துக் காட்டும் நுணுக்குக்காட்டிகள் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டன. 1880 ஆம் ஆண்டில், நாம் இன்று பார்க்கும் நுணுக்குக்காட்டி உருவாக்கப்பட்டது. பியூஸ் என்பவர் 1926 ஆம் ஆண்டில் இலத்திரனியல் நுணுக்குக்காட்டியை உருவாக்கினார்.

# பழமொழிகள்


- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- இரக்கப்போனாலும் சிறக்கப் போ.
- பேராசை பெருந் தரித்திரம்.
- முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.
- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.
- ஆத்திரக்காரனுக்குப் புத்திமத்திமம்.
- விளையும் பயிரை முளையிலே தெரியும்.
- தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.
- கோபம் பாவத்தைத் தேடும்.

இ.சஜீபா
தரம் – 5, தெல்லிப்பளை – தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி.

# கிணற்றுத் தவளை

ஒரு கிணற்றில் ஒரு தவளை நீண்டகாலமாக வாழ்ந்து வந்தது. அது அந்த கிணற்றிலேயே பிறந்தது, அங்கேயே வளர்ந்தது. ஒரு நாள் - சமுத்திரத்தில் வசித்த வேறு ஒரு புதிய தவளை அந்த கிணற்றில் வந்து குதித்தது. இரண்டு தவளைகளும் சந்தித்துக் கொண்டன. கிணற்றுத் தவளை - புதிய தவளையைப் பார்த்து கேட்டது, "நீ யார்? எங்கிருந்து வருகிறார்?"

"நான் கடற்தவளை, சமுத்திரத்தில் இருந்து வருகிறேன்" என்றது கடற்தவளை.



கிணற்றுத் தவளை, "சமுத்திரமா அது எவ்வளவு பெரிது?" என்று கேட்டது.

"சமுத்திரம் மிகவும் பெரியது" என்று வந்த தவளை பதில் சொன்னது.

கிணற்றுத் தவளை தன் கால்களை அகல நீட்டி, "நீ சொல்லும் உன் சமுத்திரம் இவ்வளவு பெரியதாக இருக்குமா?" என்று கேட்டது.

"அது இன்னமும் எவ்வளவே பெரியது" என்றது கடற்தவளை.

இதைக் கேட்டதும் கிணற்றுத்தவளை, கிணற்றினுள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குத் தாண்டிக் குதித்து நீ செல்கிற உன் கடல் இவ்வளவு பெரிதாக இருக்குமா? என்று கேட்டது.

"கடல் எவ்வளவு பெரியது என்று என்னால் கூறமுடியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம் எந்த விதத்திலும் இந்தக் கிணற்றைக் கடலோடு ஒப்பிடமுடியாது" என்றது கடற்தவளை.

தாங்கமுடியாத கோபம் வந்துவிட்டது கிணற்றுத் தவளைக்கு. "அடேய்! பொய்யா பேசுகிறாய். இந்தக் கிணற்றைவிட பெரியதாக எது இருக்கமுடியும். என்னிடம் உதைபடுவதற்கு முன் இந்தக் கிணற்றை விட்டு வெளியேறிவிடு" என்று கத்தியது. இந்த கிணற்றுத் தவளையின் குறுகிய எண்ணத்தை மாற்றுவது சாத்தியம் இல்லை என்பதை நன்றாக அறிந்துகொண்ட கடற்தவளை, இந்தக் கிணற்றை விட்டு வெளியேறுவதுதான் புத்திசாலித்தனம் என்று எண்ணி, வெளியேறி, தான் வாழும் அளவற்ற பெருங்கடலை அடைந்தது.

# வாழ்க்கையின் இரண்டு விடயங்கள்

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் | - | இன்பமும், துன்பமும். |
| வந்தால் போகாதது | - | புகழும், பழியும். |
| போனால் வராதது | - | மானமும், உயிரும். |
| தானாக வருவது | - | இளமையும், முதுமையும். |
| உடன் வருவது | - | புண்ணியமும், பாவமும். |
| அடக்க முடியாதது | - | ஆசையும், துக்கமும். |
| தவிர்க்க முடியாதது | - | பசியும், தாகமும். |
| இழிவைத் தருவது | - | பெருமையும், கோபமும். |
| அனைவருக்கும் சமம் | - | இறப்பும், பிறப்பும். |

ம.சிவகௌரி,
தரம் –05
பண்டத்தரிப்பு, மகளிர் உயர்தரப் பாடசாலை.

இங்கே மடிக்கவும்



# யார் புத்திசாலி

ஒரு பெரிய மனிதருக்கும், அவர் நிலத்தில் வேலை செய்யும் தொழிலாளிக்கும் - ஒருமுறை தங்கள் இரண்டு பேரில், யார் புத்திசாலி என்று வாக்குவாதம் வந்துவிட்டது.

"நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். நீ அதற்குச் சரியாகப் பதில் சொல்லிவிட்டால், உனக்கு நான் நூறு ரூபாய்



தருகிறேன். தெரியவில்லை என்றால் - நீ பாவம் ஏழை, எனக்கு ஐம்பது ரூபாய் தந்தால் போதும். என்ன சம்மதமா?" என்று கேட்டார் பெரிய மனிதர்.

"பந்தயத்துக்குச் சம்மதம். ஆனால், கேள்வியை நான்தான் கேட்பேன்..." என்றார் தொழிலாளி.

பெரிய மனிதர் சம்மதிக்க, தொழிலாளி கேட்டான்... "ஆறு கால்களும், மூன்று கொம்புகளும் கொண்ட மிருகத்தின் பெயர் என்ன? அது எந்த நாட்டில் இருக்கிறது?"

பெரிய மனிதருக்குப் பதில் தெரியவில்லை. பேசினபடி நூறு ரூபாயை எடுத்து, அந்தத் தொழிலாளியிடம் கொடுத்து, "எனக்குத் தெரியவில்லை. சொல், அது என்ன மிருகம்?" என்று கேட்டார்.


அதற்கு அந்ததத் தொழிலாளி, "மன்னிக்கவேண்டும் ஐயா! எனக்கும் இதற்கான பதில் தெரியவில்லை. இந்தாருங்கள், பேசினபடி நான் என் பந்தயத் தொகையைத் தருகிறேன்!" என்று அவர் தந்த நூறு ரூபாயில் ஐம்பதை அவரிடமே திருப்பித் தந்தான்.

# நீரியல் வட்டம்

மழை மாமா, மழை மாமா — உன் கதை கூறு!
மருமகள் நான் கேட்கிறேன் — உன் கதை கூறு!

அன்பான மருமகளே — என் கதை கேளு!
நீராக நானிருந்தேன், நிம்மதியாய்தான் இருந்தேன்
நீர் நிலையிலே.
உன்னை சுட்டெரிக்கும் சூரியன் தான்
என்னையும் சுட்டான்.
சூடு தாங்க முடியாமலே ஆவியுமானேன் — நீராவியுமானேன்
நீராவியானமையால் பறக்கத் தொடங்கினேன்
வானில் பறக்கத் தொடங்கினேன்.
பறந்து சென்று, ஆகாயத்தில் நீல முகிலுமாயினேன்

- லோ.தேனுஷா



# சிறுவர் அரங்கம்


## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### அவுஸ்திரேலியா

வாரந்தும் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் - இந்த வாரம் அவுஸ்ரேலியாவைப் பற்றி அறிந்துகொள்ளுவோம்.

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | கன்பரா. |
| பரப்பளவு | - | 76 லட்சத்து 82 ஆயிரத்து 300 ச.கி.மீ. |
| மொழி | - | ஆங்கிலம். |
| எழுத்தறிவு | - | 90 சத வீதம். |
| சமயம் | - | கிறிஸ்தவம். |
| நாணயம் | - | டொலர். |

அவுஸ்திரேலியா கண்டம் முழுவதும் ஒரு நாடாக உள்ளது. இந்தியப் பெருங் கடலுக்கும், பசுபிக் சமுத்திரத்திற்கும் இடையில் இது அமைந்துள்ளது.




அவுஸ்திரேலிய ஜனாதிபதி ஜோன் ஹொவார்ட்.

உலகில் எங்கும் காணமுடியாத தாவர, விலங்கு இனங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கின்றன. கங்காரு, பென்குயின் போன்றவை அவுஸ்திரேலியாவுக்கே உரித்தான தனிச்சொத்து.

இங்கு சுமார் இரண்டு இலட்சம் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கறுப்பினத்தவர்கள்.

அவுஸ்திரேலியா ஒரு கலப்புப் பண்பாடுடைய சமுதாயத்தைக் கொண்ட நாடு. நாட்டு மக்களில் 20 சதவீதத்தினர் வெளிநாடுகளில் பிறந்து, இங்கு குடியேறியவர்களாவர். பெரும்பான்மையான குடியேறிகள் - ஐரோப்பியராவர். நகர நாகரீகத்தில் இந்த நாடு முன்னிலையில் உள்ளது. மக்கள் தொகையில் 85 வீதமானோர் நகரப்புறங்களிலேயே வசிக்கின்றனர்.




அவுஸ்திரேலியக் கண்டத்தின் பெரும்பகுதி, மிகக் குறைந்தளவு மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. இதனால், கடற்கரையோரங்களில் மட்டுமே செறிவான வளர்ச்சி காணப்படுகின்றது. அவுஸ்திரேலியாவில் - நியூ சவுத்வேல்ஸ், விக்டோரியா, குயின்ஸ்லண்ட், தெற்கு அவுஸ்திரேலியா, மேற்கு அவுஸ்திரேலியா, தஸ்மேனியா என ஆறு மாநிலங்கள் உள்ளன. 1986 வரை பிரிட்டனின் கீழிருந்த அரசியல் நிர்ணயத் தொடர்புகள் யாவும் முற்றுப்பெற்றுவிட்டன.

திறமையான உற்பத்திக்கு விவசாய முறைகளாலும், இயற்கை வளங்களின் கொடையாலும் 20 ஆம் நூற்றாண்டில் நவீன தொழில் வளர்ச்சி நாடாக அவுஸ்திரேலியா மாறியுள்ளது. இந்த நாட்டில் - கம்பளி, கோதுமை, இறைச்சி வகைகள் ஏற்றுமதி மற்றும் சுரங்கத் தொழில்கள் இங்கு மிகவளர்ச்சி கண்டுள்ளன. இங்கு இலங்கையில் இருந்து சென்ற பெருமளவான தமிழர்களும் குடியேறியிருக்கின்றனர்.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- அ.ஜீவானந்தா
கற்கும் பாடசாலை :-
புனித பத்திரிசியார் கல்லூரி
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- அ.மெஸ்றூன் நிஸா
கற்கும் பாடசாலை :-
ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- ஏ.லவச்சந்திரன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ற்ரன் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- ச.மரியயோனி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- ந.துஜிகா
கற்கும் பாடசாலை :-
விக்னேஸ்வராக் கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
திருக்குறள் படித்தல், தொலைக்காட்சி பார்த்தல், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:- ம.நிவந்தன்
கற்கும் பாடசாலை :-
ஹாட்லிக் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- லோ.காந்தரூபி
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

# நாடுகளும் அதன் தலைநகரங்களும்

| | |
|---|---|
| சவூதி அரேபியா | ~ றியாத் |
| ஆப்கானிஸ்தான் | ~ காபூல் |
| ஓமான் | ~ மஸ்கட் |
| சிரியா | ~ டமஸ்கஸ் |
| ஈராக் | ~ பாக்தாத் |
| குவைத் | ~ குவைத் |
| ஜோர்தான் | ~ அம்மான் |
| இஸ்ரேல் | ~ ரெல்அவிவ் |



செ.சறோஜ்
தரம் - 8
யாழ்.மகாஜனா கல்லூரி

இங்கே மடிக்கவும்



# ஏமாந்த நரி




# உங்கள் கைவண்ணம்



சி.கயிபன்
தரம் - 8

# பல்லில்லாத பல்

1. உற்சாகம் இல்லாத பல் எது?
சோம்பல்
2. பிஞ்சில் பழுத்த பல் எது?
வெதும்பல்
3. சாப்பிடும் பல் எது?
சம்பல்
4. அடுப்பில் எடுக்கும் பல் எது?
சாம்பல்
5. உணவு கொடுக்கும் பல் எது?
விருந்தோம்பல்
6. கடலில் செல்லும் பல் எது?
கப்பல்
7. அன்பு செலுத்தும் பல் எது?
விரும்பல்

ப.விஜேகாந், தரம் - 7
வேலணை மத்திய கல்லூரி

# விடுகதைகளும் விடைகளும்

1. ஏறு ஏறு சங்கிலி, இறங்கு இறங்கு சங்கிலி. அது என்ன?
2. சிறு தூசி விழுந்தால், குளமே கலங்கி விடும். அது என்ன?
3. ஓயாமல் இரையும் இயந்திரம் அல்ல, உருண் டோடி வரும் பந்து அல்ல. அது என்ன?
4. கனலை ஏத்தியதும், கண்ணீர் வடிப்பான். அவன் யார்?
5. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல. பட்டை அடித்திருப்பான் சாமியாரும் அல்ல. அவன் யார்?
6. வெளியிருப்பதைத் தொட்டால், உள்ளி ருப்பவன் அலறுவான். அவன் யார்?




6. வானொலி
5. அணில்
4. மெழுகுதிரி.
3. கடல் அலை
2. கண்
1. அணில்

ந. ஜென்சன்
கோப்பாய் றோ.க.த.க பாடசாலை
தரம் - 5

# வழிகாட்டுங்கள்

தப்பியோடும் திருடனைப் பிடிக்க, பொலிஸ்காரர் எந்த வழியால் போகவேண்டும்?



ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இனிஒருவற்கு*
*அஃது இறந்து வாழ்தும் எனல்*

- திருக்குறள்

# நமது நோக்கு

## வளம் சேர்க்கும் தினம்!

யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக மாகாண மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் ஆரம்பித்துள்ளன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கிருந்தும் வந்து கலந்துகொள்ளும்- இந்நிகழ்வை, போட்டி என்ற வரையறைக்குள் உள்ளடக்கிவிடுவதற்கு நியாயமில்லைத்தான்.

ஏனெனில் - தமிழ்மொழியையும், தமிழ் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு - மாணவர்களின் மட்டத்தில் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெருமளவுக்குத் தரும் இந்த நிகழ்வை- தமிழ்விழா எனக் கூறுவதே சாலப்பொருத்தமானதாகும்.

இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் சமயங்களில்தான் - தமிழ்மொழியிலான ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தவும், தமிழ் கலாசாரம் - பண்பாட்டைத் தழுவிய நெறிமுறைகளைப் பின்பற்றவும், மாணவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கின்றது எனக் கூறினால் - அது, மிகையில்லை என்றே சொல்லலாம்.

இன்று நடைபெறும் மங்கல விழாக்களிலும், மத வைபவங்களிலும் மேற்கத்தையக் கலாசாரத்தின் பாதிப்பில் உடையணிந்து - சொந்த உருவம் அழிந்து, எமது இளையோர் பங்கேற்பது சர்வசாதரணமாகிவிட்டபோது -

தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பங்கெடுப்பதற்காகவாவது - தமிழ் கலாசாரத்தைப் பின்பற்றி மாணவர்கள் நடந்துகொள்ளவேண்டியிருக்கின்ற விதிமுறை, தமிழ்நெஞ்சங்கள் மனம்விட்டுப் பாராட்டப்படவேண்டிய அளப்பரும் செயலென்றே கூறலாம்.

இந்தவகையில், ஆண்டின் ஒரு சில தினங்களிலாவது - மாணவர்களை, தமிழ்க் கலாசார உடைகளில் காணக்கூடிய தன்மையை - தனியே ஒரு சில போட்டிகளுக்கு மட்டுமே என்று மட்டுப்படுத்திவிடாது, சகல போட்டியாளர்களும் இதனைப் பின்பற்றவேண்டிய அவசியத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விதிமுறையாக அறிமுகப்படுத்துவார்களாயின் - அது, தமிழ் கலாசாரத்தைப் பேணுவதில் மாணவர்களிடம் இன்னமும் பரந்துபட்ட விளைவைத் தருவதற்குதவும்.

தமிழ்மொழித்தினப் போட்டிகள் - இந்தளவில் மட்டும் நின்றுவிடாது - அழகியற் கலைகளுக்கு அளிக்கின்ற முக்கியத்துவம், காலத்தின் தேவையை உணர்த்தும் மற்றுமொரு பராட்டுக்குரிய அம்சமாகும்.

கற்றல்சார் தொழிற்பாடுகளுக்குள் மாத்திரமே அமிழ்ந்து கிடக்கும் மாணவர்களிடமுள்ள - அழகியற் திறனை, ஆக்க வெளிப்பாடுகளை வெளிக்கொணருவதற்கு, தமிழ்த்தினப் போட்டிகள் ஆரோக்கியமான களங்களாகின்றன.

தனிப்பட மாணவர்கள் கொண்டிருக்கும் திறன்- போட்டிகள் மூலமாகத் தரமும், விருத்தியுமடைவதற்கு - இதுபோன்ற வாய்ப்புக்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வது மிகக்குறைவாகவுள்ள எமது சமூகத்தில் - தமிழ்மொழித் தினம் ஒரு வரப்பிரசாதமாகும்.

அதேவேளை - அருகிப்போகும் எமது மண்ணின் கலைகளுக்குப் புத்துயிர்பைத் தருவதற்கும் தமிழ்மொழித் தினம் வழிதருவதாகின்றது.

சிந்துநடை, வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள், விசேட கூத்துக்கள் என மண்ணின் மணம் கமிழும் எமது பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதற்குரிய ஒரு உத்வேகம் மாணவரிடையே மிளிர்வதற்கு - தமிழ்மொழித் தினம் வடிகாலாவதை, துறை சார்ந்தோர் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றனர்.

இன்றைய கல்விச் சமூகத்திடம் இழிவடைந்துவரும் வாசிப்புத்திறனை ஊக்கப்படுத்தவும் தமிழ்மொழித் தினம் தவறவில்லை.

மாணவர்களிடையேயான தரமான கட்டுரை, சிறுகதை ஆக்கங்களுக்கு, தேர்ந்த வாசிப்புத்திறன் முக்கிய காரணமாக இருப்பதால் - வாசிப்புத்திறனாற்றலை மதிப்பிடவும் தமிழ்த் தினப் போட்டிகள் வழி சமைக்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் - எமது வாழ்வை, எமது தளத்தை, எமது மொழியை, எமது பண்பாட்டை - தமிழ்மொழித் தினம் எமக்கு நினைவூட்டி வலியுறுத்துகிறது என்றால் - அதில் வாதப்பிரதிவாதங்களுக்கு இடமில்லையென்றே கூறவேண்டும்.

# எமது கடலில் சிங்களவர் மீன்பிடிக்க நாம் கடற்படையால் துரத்தப்படுகிறோம்!

## கடற்தொழிலாளர்கள் ரெலவ்சனிடம் நேரில் புகார்

(ஆழியவளை)

எமது கடற்பிரதேசத்தில் - சிங்கள மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் தம்மைத் தாக்கமாட்டார்கள் என்ற உறுதியான நம்பிக்கையின் காரணமாகவே, சிங்கள மீனவர்கள் எமது பகுதியில் மீன்பிடிக்கிறார்கள். ஆனால் எம்மை, எமது பகுதியில் சென்று மீன்பிடிக்க கடற்படை தடுக்கின்றது.

இவ்வாறு - முல்லை மாவட்ட கடற்தொழிலாளர்கள், கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சமாச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் - கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனிடம், கடற்தொழிலாளர்கள் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்பு, அமைதி காக்க வந்த இந்தியப்படையினர் சொல்ல முடியாத அட்டூழியங்களைச் செய்ததோடு, பலரைக் கொலையும் செய்தனர். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நிலைமை இச்சமாதான ஒப்பந்தத்தில் வருவதற்கு, நோர்வேத் தரப்பு இடம்கொடுக்காது என நம்புகிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்றுவரை உருப்படியான எந்த விடயமும் நிறைவேற்றப்படவில்லை. கடற்படையினரின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. எமது பாதுகாப்பிற்காக, தமது உயிரைத் தியாகம் செய்கின்ற புலிகள்மீது நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். ஆனால், எமது பாதுகாவலர்கள் மீது - கடற்படையினர் ஒப்பந்தத்தை மீறி, சர்வதேசக் கடற்பரப்பில் அவர்களுக்குச் சொந்தமான கப்பல்களையும், போராளிகளையும் அழித்தனர். கடற்படையினரின் இப்படிப்பட்ட தாக்குதல்கள் எம்மை மிகவும் ஆத்திரமடையச் செய்துள்ளது. இத்தகைய தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு, கண்காணிப்புக்குழுவால் எத்தகைய சரியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு முறையும் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற பின்னர், இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறாது என, கண்காணிப்புக் குழுவால் உறுதியளிக்கப்படுகின்றதே தவிர, நடைபெறாமல் தடுக்க கண்காணிப்புக் குழுவால் முடியவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் நாம் சுதந்திரமாக தொழில்செய்ய முடியாதநிலை உள்ளது. நாம் கடலில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, எமது பெறுமதியான தொழில் உபகரணங்களையும், வள்ளங்களையும் - சிங்களக் கடற்படையினர் தமது பாரிய கப்பல்களால் தாக்கி அழிக்கின்றனர். சிலவேளைகளில், எமது உயிரைக்கூட அழிக்கின்ற மிகக் கொடூரமான சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

நாம் மீனவர்கள் என்பதை - சிறிய விளக்குகள் மூலமும், ரோர்ச்லைட் மூலமும் வெளிப்படுத்துகின்றோம். ஆனால், கடற்படையினர், எம்மை யார் என்பதை நன்கு இனங்கண்டுகொண்ட பின்னரே எம்மீது தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டும், இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

இவற்றிற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சன்,

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, 508 நாட்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால், இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் இன்னமும் திரும்பவில்லை. புனரமைப்புப்பணிகள் மிகவும் மந்தமாகவே நடைபெறுகின்றன. இதை நான் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்கிறேன்.

மேலும் - முல்லைத்தீவு முதல் பருத்தித்துறை வரையான கடற்பிரதேசத்தில், கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் மீது இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதை ஒப்புக்கொண்ட அவர்,

தமிழ்மக்கள் என்பதற்காக நீங்கள் தாக்கப்படுகின்றீர்கள் என்றால், அத்தகைய தாக்குதல்களை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இதனைக் கருத்திற்கொண்டு கடற்படையினருடன் கதைத்து, இதற்கான முடிவைத் தருவேன் என்றார்.

மக்களுடனான இப்படிப்பட்ட சந்திப்புக்கள் மூலம்தான் உங்களது பிரச்சினைகளை நான் அறிந்துகொள்ள முடிகின்றது. நாம் அறிவதன் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த சமாதான முயற்சிகள் பாதுகாக்கப்படும் எனவும் ரெலவ்சன் கூறினார். (122)

## இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக

# 1500 விகாரைகளுக்கு முன்பாக பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்வர்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணம் பிரிக்கப்படவேண்டும், இடைக்கால நிர்வாகம் - விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படக்கூடாது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, 'வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு' என்ற குழுவினர் நேற்று அம்பாறையில் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்தக் கையெழுத்துத் திரட்டுப் பிரதிகள் - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் இந்தக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை - இடைக்கால நிர்வாக அமைப்புக்கு, எதிர்ப்புக்காட்டும் முகமாக, இன்னும் ஓரிரு தினங்களில் தேசிய பிக்குமார் முன்னணி, பெரியளவிலான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவர்கள் நாடளாவியரீதியில் உள்ள 1500 விகாரைகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும், புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக, தேசிய பிக்குமார் முன்னணி அறிவித்துள்ளது.

# கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்க அமெரிக்காவிலிருந்து மோப்பநாய்கள்

## 'மார்ஷல் லெசுஷி இன்ஸ்ரிரியூட்' உதவுகிறது

வடக்கில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு - மோப்ப நாய்களைப் பயன்படுத்தும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு - அமெரிக்காவிலுள்ள நிறுவனமொன்றிடமிருந்து உதவி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவர் தேவிந்த ஆர்.சுபசிங்க - அமெரிக்காவிலுள்ள மோப்பநாய்களை வழங்கும் நிறுவனமொன்றுடன், பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

'மார்ஷல் லெசுஷி இன்ஸ்ரிரியூட்' என்ற நிறுவனத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்படி - இந்த நிறுவனம் ஏற்கனவே பல நாடுகளிலும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்திய மோப்பநாய்களை - இலங்கையிலும் பயன்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை - இலங்கையில் வைத்தே இங்குள்ள நாய்களுக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவது பற்றிய பயிற்சிகளை வழங்குவதற்கும் இந்த நிறுவனம் ஒத்துக்கொண்டுள்ளது.

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணிவெடிகள் அகற்றும் நடைமுறைகளின்படி - கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஏறத்தாழ 25 வருடங்களுக்கு மேல் செல்லும் என்பதால், உடனடி நடவடிக்கைகளின் தேவைப்படி - இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக - அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த ஆர்.சுபசிங்க- அந்த நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அமெரிக்க நிறுவனம் வைத்திருக்கும் 700 இற்கும் மேற்பட்ட மோப்பநாய்கள், 23 நாடுகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மோப்பநாய்கள், ஆரம்பத்தில் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு, பின்னரே கண்ணிவெடிகளை அகற்றும் மனிதாபிமானத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாக - அமெரிக்க நிறுவனத்தின் தலைவரான பெரிபல்ரி மோர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால நிர்வாகம் பற்றிய கருத்து ஜனாதிபதி இப்போதைக்கு வெளியிடார்!

## சுதந்திரக் கட்சிப் பேச்சாளர் மங்கள சமரவீர

விடுதலைப்புலிகளுக்கு - அரசாங்கம் அனுப்பிவைத்த இடைக்காலத் திட்டவரைபின் ஆவணம் ஒன்று ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் - அதுபற்றி அவர் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும், அக்கட்சியின் பேச்சாளருமான மக்கள சமரவீர தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் இடைக்காலத் திட்டவரைபு பற்றி கருத்துக்களை வெளியிடுவதை - ஜனாதிபதி தவிர்க்க விரும்புவதாகவும், திட்டவரைபு பற்றிய ஜனாதிபதியின் விரிவான விளக்கமோ அல்லது அவை சார்பான நிலைப்பாடோ தற்போதைக்குத் தெரியப்படுத்தப்படமாட்டாது எனவும், மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தின் திட்டவரைபை ஏற்பதா அல்லது எதிர்ப்பதா என்பது பற்றி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுடன் ஆராய்ந்த பின்னரே, ஜனாதிபதி தீர்க்கமான முடிவை மேற்கொள்வார் எனத் தெரிவித்த் மங்கள சமரவீர,

அரசாங்கம் - விடுதலைப் புலிகளுக்கு ஒரு ஆவணத்தையும், ஜனாதிபதிக்கு மற்றொரு ஆவணத்தையும் சமர்ப்பித்தது என்ற குற்றச்சாட்டு உண்மையானால், இது - டோன் யுவான் தர்மபால - சிங்கள சமூகத்துக்கு பண்டைய காலத்தில் செய்த துரோகத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததாக அது இருக்க மாட்டாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பு லிகளுக்கு அனுப்பப்பட்ட இடைக்காலத் திட்டவரைபு பற்றி ஆராய்வதற்கு, லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி அமைத்திருப்பது தெரிந்ததே.

இந்தக் குழுவும், இடைக்கால நிர்வாகம்பற்றி மிகக்கவனமாக ஆராய்ந்து வருவதோடு, அது தொடர்பான தனது கருத்துக்களை ஜனாதிபதியிடம் மிகவிரைவில் சமர்ப்பிக்குமெனத் தெரியவருகிறது.

# அமெரிக்கப் போர்க் கப்பலின் வருகை; பின்னணியிலுள்ள மர்மங்கள் என்ன?

(நேற்றைய தொடர்ச்சி....)

பிலிப்பீன்ஸ் அமெரிக்காவுக்கு அட்டகாசமான **Option** ஒன்றை அல்லது முன்னுதாரணம் ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. அதை எங்கே **use** பண்ணினாலும் - வெளிநாடுகளின் அல்லது சர்வதேச அமைப்புகளின் எதிர்ப்புகளைச் சட்டரீதியாக வாயடைக்க வைத்துவிடலாம்.

அதன்படி, துண்டு துண்டாக வேறு வேறு ஒப்பந்தங்களைச் செய்வது - அப்படிச் செய்யக்கூடிய இந்த ஒப்பந்தங்களுக்குச் சில உதாரணங்கள்.

**DFA - Desiting Forces Agreement, Military Assitants Agreement, NLSA Neuclear Logistic Support Agreement.**

இதில் முதலாவது, தற்காலிகத் தளங்களுக்கு. இரண்டாவது, இலங்கை அரசு இராணுவரீதியான உதவிகளை அமெரிக்காவிடம் கோரும் பட்சத்தில் செய்யப்படக்கூடியது.

மூன்றாவது, அதிஅற்புதம். இரு நாடுகளுக்கிடையேகூடச் செய்யத்தேவையில்லை. அளவில் செய்யப்பட்டதால், இதற்கு அமெரிக்கக் **Congress** இன் அனுமதியோ, செனட்டின் அனுமதியோ தேவையில்லை.

இவ்வளவும் பிலிப்பீன்ஸில் நடந்த **Flash Back.** தொடர்ந்து இலங்கையில் நடக்கும் விளையாட்டு.

இலங்கை ஆயுதப் படைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும், இலங்கை ஜனாதிபதி- அமெரிக்காவுடன் ஒத்துழைக்க முன்வந்தால், இலங்கைப் பிரதமரின் அனுமதி இல்லாமலேயே, அமெரிக்காவின் **South Asian Command** இராணுவ கேணல் ஒருவரும், கொழும்பிலுள்ள இராணுவ கேணல் ஒருவரும், இது போன்ற **NLSA** ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடமுடியும்.

சர்வதேச அளவில் யாருமே இதுபற்றி சண்டைக்கு வரமாட்டார்கள். இலங்கை ஜனாதிபதிக்கு, இந்த **Option** பற்றி அமெரிக்கா நிச்சயம் கூறி யிருக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி - அரசியல் ரீதியாகத் தனது கையில் வைத்திருக்கும் கடைசி ஆயுதம், இப்படியான நாடாளுமன்ற அனுமதி தேவையில்லாத இராணுவங்களுக்கிடையேயான ஒரு **NLSA** ஒப்பந்தமாக்கூட இருக்கமுடியும்.



இது உண்மையிலேயே அவர்கள் சொல்லுவதுபோல, எரிபொருள் நிரப்புவதற்கான ஒப்பந்தம்தான். இதில் நிரப்புதலுக்கான என்று கூறுவதற்கான காரணம், இந்த எரிபொருள் நிரப்பலுடன் கூடவே வேறு சில சமாச்சாரங்களும் சேர்ந்தே வரும்.

இரு இராணுவ **Base** களுக்கு இடையேகூடச் செய்யமுடியும்.

அமெரிக்கா - பிலிப்பீன்ஸில் இருந்த ஐந்து வருட **NLSA** அப்படியான ஒன்றுதான். அது பிலிப்பீன்ஸ் நாட்டுக்கும், அமெரிக்கா என்ற நாட்டுக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்ல. பிலிப்பீன்ஸ் படைப்பிரிவின் பிரதிநிதிக்கும், அமெரிக்காவின் **Pacific Command** பிரதிநிதிக்கும் இடையே செய்யப்பட்ட சட்ட ரீதியான ஒப்பந்தம்.

மணிலாவிலுள்ள **US Embassy** இந்த **NLSA** பற்றிக் கூறும்போது,

பிலிபபீன்ஸ் - அமெரிக்க ஆயுதப்படையினர் கீழ்மட்ட அளவில் தங்களிடையே செய்துகொண்ட ஒப்பந்தம். எனக் குறிப்பிட்டது. அது உண்மைதான். இந்த **Agreement** இல் கையெழுத்திட்டவர்கள் - பிலிப்பீன்ஸ் அல்லது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புச் செயலாளரோ, வெளிநாட்டமைச்சைச் சேர்ந்தவர்கள் யாரோ அல்ல.

பிலிப்பீன்ஸில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் வைத்து - பிலிப்பீன்ஸ் இராணுவத்தைச் சேர்ந்த **Navy Commander** உம், **US Army Colonel** மைக்கல்ஸ் பொலஸ்கோவும் ஐந்துவருட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

இது நாடுகளுக்கிடையே செய்யப்படாமல்- இரு இராணுவங்களுக்கிடையே கீழ்மட்ட

அந்தச் சமாச்சாரங்களில் சில, இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டத்துக்கேகூட எதிரானது.

அவற்றைப் பாருங்கள். அமெரிக்கப் போர்க்கப்பல் - இலங்கைத் துறைமுகத்துக்குள் எரிபொருள் நிரப்ப வரவேண்டுமென்றால், துறைமுகத்துக்குள் வந்து நங்கூரமிட்டு நிற்க வேண்டுமல்லவா? இது முதலாவது -


கப்பலுக்கு எரிபொருள் நிரப்புவதென்பது- உங்கள் வீட்டுக் காரைப்போல, மூடியைக் கழற்றினோம், எரிபொருளை ஊற்றினோம் என்ற மாதிரியல்ல. சில நடைமுறைகள் எல்லாம் இருக்கின்றன. அதன்போது சில உதிரிப் பாகங்களை மாற்ற வேண்டிவரலாம். பழுது பார்க்க வேண்டிவரலாம். இது இரண்டாவது.

அத்துடன் - அமெரிக்கக் கப்பலுக்குள் ஆட்கள் இருப்பார்கள் அல்லவா? இவர்கள் இலங்கைத்துறைமுகம் ஒன்றில் இறங்கப்போகிறார்கள். நாட்டின் எல்லைகளுக்குள் உலாவப் போகிறார்கள். இவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பது, தனிப்பட்ட **Passport** களில் விசா கொடுத்தல்ல. அவர்கள் இலங்கை நாட்டுக்குள் நுழையப்போவது இரண்டு வேறுபட்ட **Documents** உடன்.

இதன்படி, இவர்கள் இலங்கைக்குள் நடமாடப்போவது, ஒரு **Visitor** ஆகவோ, **Tourist** ஆகவோ, ஏன் ஓர் **Diplomat** ஆகவோகூட அல்ல. இது மூன்றாவது.

**Refueling** அல்லது எரிபொருள் மீள் நிரப்புதல் என்ற பொதுவான சொற்பதத்துடன் இணைந்துவரும் மூன்று சமாச்சாரங்களையும் கூட - உத்தியோகபூர்வமான சொற்பதங்களையும் கூறப்போனால், அது கொஞ்சம் பாரதூரமான அச்சத்தைக்கொடுக்கும்.

இதோ, அதையும் அறிந்து வைத்துக் கொள்ளுங்கள். அமெரிக்கக் கப்பல் இலங்கைத்துறைமுகத்துக்குள் நுழையும்போது- கூடவே நடைபெறும் சமாச்சாரங்களில் உத்தியோகபூர்வமான வரைவிலக்கணங்கள்.



முதலாவது - அமெரிக்கத் தளங்களுக்கு, இலங்கையின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் கொடுக்கப்படும் தற்காலிக அனுமதியும், தனிப்பட்ட வசதியும்.

இரண்டாவது - அமெரிக்கத் தளங்களுக்கான பழுதுபார்த்தல்கள், உதிரிப்பாக மாற்றீடுகள், இயங்கு பரிசோதனைகள்.

மூன்றாவது - அமெரிக்கா சார்பாக யுத்தக் கடமையில் ஈடுபட்டுள்ள படையினரையும், நபர்களையும், அமெரிக்க யுத்தக் கலங்களை இயக்கும் நபர்களையும் - அவர்கள் யுத்தக் கடமையில் இருக்கும்போது இலங்கை நாட்டுக்குள் அனுமதிப்பது.

இந்தத் தற்காலிக அனுமதிகளின் காலப் பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நீடித்தால், அதற்குக் கிடைக்கப்போகும் பெயர், அமெரிக்காவின் தற்காலிக கடற்படைமுகாம்.

இப்போது, யுத்தசாத்தியத்தையும் யோசித்துப் பாருங்கள். இதுவரை நடக்கவில்லை. இனிமேலும் நடக்காது என்பதற்கு உத்தரவாதமும் இல்லை என்ற வகையிலான இந்த சாத்தியங்கள்.

அமெரிக்கா - மூன்று கப்பல்களை, இலங்கையின் கடல் எல்லைக்குள் ஒரே சமயத்தில் கொண்டுவரமுடியும். அவற்றுக்கான தற்காலிக தரிப்பிட் வசதியை, இருபடி ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுக்கும்.

சம்பந்தப்பட்ட கப்பலுக்கு, உடனடி **Assignments** எதுவும் ஆசியாவில் இல்லை என்றும், அதனால் ஒரு மாதத்தின்பின் அந்தக் கப்பல்களுக்கு ஆசியக் கடற்பகுதிக்குள் **Assignments** இருக்கிறது என்றும் - ஒரு பேச்சுக்கு வைத்துக்கொண்டால், கப்பல்களை ஹவாய் வரை கொண்டுசென்று திரும்பவும் ஆசியா வரை கொண்டுவருவதைவிட, கொழும்புத் துறைமுகத்தில் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கான செலவு குறைவானது.

இதைக் காரணம் காட்டி - கப்பல்களைக் கொழும்புத் துறைமுகத்தில் ஓரிரு மாதங்கள் நிறுத்திவைக்கமுடியும். மூன்று கப்பல்களை இங்கு தொடர்ந்து வைத்திருப்பதால், இடப் பிரச்சினை ஏற்படலாம். இதற்காக, மூன்றில் ஒரு கப்பலைத் திருகோணமலைத் துறைமுகத்தின் பக்கமாக நகர்த்திவிடலாம்.

வேறொன்றை - மன்னார் கடற்பகுதிக்கோ, காங்கேசன்துறை துறைமுகத்துக்கோ நகர்த்திவிடலாம்.

இப்போது கூறிய **Possibility** சாத்தியமானால் என்ன நடைபெறும்?

இலங்கையின் கடற்கேந்திரங்களும், சர்வதேச கடற்பகுதியிலிருந்து இலங்கையின் கடற்பகுதிக்குள் நுழையும் பாதைகளும், அமெரிக்கக் கப்பல்களின் பார்வைக்குள் வந்துவிடும் இல்லையா?

இப்படி ஒரு சந்தர்ப்பம் வந்துவிடும் போது கூட, அமெரிக்க இராணுவத் தளங்கள் எதுவும் உத்தியோகபூர்வமாக அமைக்கப்படவில்லை என்பதுதான், சர்வதேச சமூகம் இதில் பார்க்கும் **View** ஆக இருக்கும்.

சிறிய தீவான இலங்கையின் மூன்று பக்கங்களிலும், மூன்று அமெரிக்கக் கப்பல்களை நிறுத்தி வைப்பதும், அதன் மூலமாக இலங்கையின் கடற்பகுதிகளைச் **Check** வைப்பதும் சட்டப்படி அமெரிக்கா நடந்துகொள்வது, சர்வதேச சட்டத்தை மீறாமல் இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட நடைமுறைதான்.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்கா சொல்வதெல்லாம், அமெரிக்கா தனது இராணுவமுகாமொன்றை இலங்கையில் அமைக்கப் போவதேயில்லை. அதாவது, நான்குபுறமும் முட்கம்பிகளால் அடைக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் வாசலில், **Military Base - USA** என்ற **Board** அவர்கள் வைக்கப்போவதிலலை.

இன்று அமெரிக்கா வைத்திருக்கும் யுத்தக்கப்பல்கள், விமானங்களில் உள்ள தொழில்நுட்பத்துக்கும், அவற்றில் தயாராக இருக்கும் **Medium and long range Missiles** களுக்கு, அமெரிக்கா - இலங்கையில் முகாம் அமைத்து வாசலில் **Board** மாட்டித்தான் காவல்செய்ய வேண்டும் என்றில்லை.

வானிலும், கடலிலும் இருந்தே காரியங்களைச் செய்யமுடியும். உங்களுக்கு அநேகமாக **Mr.**அலிபாபாவின் கதை தெரிந்திருக்கும். இவர்தான் அலிபாபாவும் 40 திருடர்களும் கதையின் **Hero.**

**ரிஷி**

அவர் மாத்திரம் குகைக்கு வெளியே **Board** வைத்துக் கொண்டா தொழில் செய்தார்? **Alibaba and Thiefs** - இங்கு கொள்ளைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் அடித்துக் கொடுக்கப்படும் என்று.

ஒரு ஒற்றுமை பார்த்தீர்களா? அலிபாபா ஆங்கிலத்தில் ஏழு எழுத்து. அவர் அடித்த **Robbery** யும் ஆங்கிலத்தில் ஏழு எழுத்து. **America** கூட ஆங்கிலத்தில் ஏழு எழுத்துத்தான். ◆

# கவிஞர் பஞ்சாட்சரத்தின் தமிழ்ப்பணி இந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கிறது!

## நூல் வெளியீட்டு விழாவில் சபா ஜெயராசா

"ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டாலும், தமிழ்ப்பணியில் இன்றும் இளைஞராகவே உற்சாகத்தோடு உழைப்பவர் தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் நண்பர் பஞ்சாட்சரம். மிகவும் இளம் வயதில் கவிதை பாடத் தொடங்கியவர். இருபது வயதளவில் தாம் எழுதிய 'எழிலி' காவிய நூலுக்காக, இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசைப்பெற்றவர். இளவயதிலேயே பண்டிதர் பரீட்சையிலும் தேறியவர்.

இன்றுவரை நாற்பத்தைந்து நூல்களை வெளியிட்டவர். இளமையிலேயே இந்து சாசனம் பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை பூண்டவர். இவர் கவிஞராகத் தமிழ் உலகுக்கு அறிமுகமாகிய அதேவேளை, இன்று கதைகள், நாடகங்கள், நாவல் என்பவற்றிலும் பிரகாசித்து வருகிறார். இன்றும் நூல்களை எழுதிக் கொண்டும், வெளியிட்டுக் கொண்டும் விடாமுயற்சியுடன் இயங்குகிறார். இவர் நீண்ட ஆயுள் பெற்று, நிறையத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும்."

- இவ்வாறு, அண்மையில் இணுவில் மத்திய கல்லூரியில்- இணுவில் கலை இலக்கியவட்டம் எழுத்தாளர் துரை எங்கரசு தலைமையில் நடாத்திய ச.வே.பஞ்சாட்சரத்தின் "வேள்வி நெருப்பு" 50 கதைகள் நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரை ஆற்றிய பேராசிரியர் சபா. ஜெயராசா குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் தனது வெளியீட்டுரையில்,

"கவிஞர் பஞ்சாட்சரத்தின் தமிழ்ப்பற்று, இனப்பற்று, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அவருக்குள்ள வேட்கை, அவரது ஆழம் என்பவற்றைத் தெரிந்துகொள்வதற்கு அவரது இந்நூலின முகவுரையைப் படித்தாலேபோதும்" எனக் குறிப்பிட்டார்.

கவிஞர் நாகசிவசிதம்பரம் வரவேற்புரையையும், இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் தொடக்கவுரையையும், ஆய்வுரைகளைக் கவிஞர் கோ.பத்மநாதனும், ந.சத்தியபாலனும் நிகழ்த்தினர். செயலாளர் ந.ஞானசூரியன் நன்றியுரையை வழங்கினார்.




இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் "வேள்வி நெருப்பு" 50 கதைகள் நூல் வெளியீட்டு விழாவில், பேராசிரியர் சபா ஜெயராசா ஆசியுரை நிகழ்த்துகிறார். மேடையில் - கவிஞர் சோ.பத்மநாதன், நா.சத்தியபாலன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



தென்கொரியாவில் - அமெரிக்க இராணுவத்தளம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவியை, கலகம் அடக்கும் பொலிஸார் பலவந்தமாக கைதுசெய்கின்றனர்.

# இஸ்ரேல் சிப்பாயின் சூட்டில் ஐந்து வயது சிறுவன் பலி!

மேற்குக்கரையில்- இஸ்ரேலிய சோதனைச் சாவடியில் நின்ற இஸ்ரேலிய இராணுவச் சிப்பாய் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில், ஐந்துவயது பலஸ்தீன சிறுவன் பலியானான். அவனின் இரு சகோதரிகள் படுகாயமடைந்தனர். இவர்கள் சென்ற கார்மீதே தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

தொழில்நுட்பத் தவறே இத்தாக்குதலுக்குக் காரணம் என, இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். தாக்குதலில் சிறுவன் ஸ்தலத்தில் பலியானதாகவும்- அவனின் சகோதரிகள் கையில் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

வொஷிங்ரனில் பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் - அமெரிக்க ஜனாதிபதி புஷ்சைச் சந்திக்க சில மணிநேரத்தின் முன் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. இப்பேச்சுக்களின்போது, பலஸ்தீன - இஸ்ரேலிய சமாதானத் திட்டத்தின் கீழ் மேற்குக் கரையிலுள்ள



இஸ்ரேலியப் படைகளின் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் கோருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சதாம் புதல்வர்களின் சடலங்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு!



(பக்தாத்)

அமெரிக்கப்படையினரால் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள, சதாமின் புதல்வர்களைப் படம்பிடிக்கத் தொலைக் காட்சிச் செய்தியாளர்களுக்கு, அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். முன்னதாக, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் - சடலங்களின் படங்களை வெளியிடத் தயக்கம் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, போரில் இறந்தவர்களது சடலங்களை ஒளிபரப்புவதில்லை எனக் கடைப்பிடிக்கும் கொள்கையும், ஈராக் போரில் - அரபுத் தொலைக் காட்சியான அல்ஜெசீரா, பலியான அமெரிக்கப் படையினரின் சடலங்களைக் காட்டியபோது, அதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையுமே- தற்போது சதாமின் புதல்வர்களது சடலங்களை ஒளிபரப்ப, அமெரிக்கா தயங்கியதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இத்தகைய படத்தை வெளியிடுவதன் மூலமே - சதாமின் எழுச்சிக்கு, இனி இடமில்லை என வலியுறுத்தமுடியும் என அமெரிக்கா கருதுகிறது. ஈராக்கியர்கள் இவற்றைப் பார்க்கட்டும். இனிமேல் - சதாமின் ஆட்சிக்கு இடமில்லை என்பதை உணரட்டும் என, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

கொல்லப்பட்ட சதாமின் புதல்வர்களது படங்கள் - அரபுத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டபோது, பக்தாத்தில் வாகனங்கள் ஹோர்ன் ஒலியை எழுப்பியதாகவும், சில இடங்களில் - ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பக்தாத் வாசிகள் - இப்படங்கள் குறித்து தொடர்ந்தும் சந்தேகம் எழுப்பியே வருகின்றனர்.

# யுவதியைக் கொன்ற அதிகாரிக்கு பத்து வருட சிறைத் தண்டனை!


## ரஷ்ய நீதிமன்று விதித்தது

18 வயதான செச்னியப் பெண் ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காக- ரஷ்யப் படை அதிகாரி ஒருவருக்கு 10 வருட சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. கடந்த 2000 ஆம் ஆண்டு செச்னியப் பெண் ஒருவரை கேணல் யூரி புடனோவ் (வயது 40) என்ற இந்த டாங்கிப்படை அதிகாரி கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த டிசெம்பர் - இவர் தென் ரஷ்ய நீதிமன்றம் ஒன்றினால் விடுவிக்கப்பட்டபோதும், ரஷ்ய உயர்நீதிமன்று இவர் மீதான விசாரணையை மீளவும் நடத்துமாறு பணித்தது.

இவ்விசாரணைகளின் தீர்ப்பு - நேற்று வெளியானபோது- பெண்ணைக் கடத்திச்சென்று, தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அப்பெண்ணைக் கொலை செய்ததாக இவ்வதிகாரிமீது குற்றம் சுமத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து இவரின் இராணுவப்பதவி நீக்கப்பட்டதோடு, துணிச்சலுக்காக வழங்கப்பட்டிருந்த இராணுவ விருதும் திரும்பப் பெறப்பட்டது.

குகேயிவா என்ற 18 வயது யுவதியை, அவரது வீட்டிலிருந்து கடத்திச்சென்று அருகிலுள்ள இராணுவ முகாமில் வைத்து அடித்துப் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட பின்னர் கொன்றதாக - கேணல் புடனோவ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அந்த யுவதி, செச்னிய சினைப்பர் தாக்குதல் பெண்போராளி எனக் கருதியே தாம் அவரைக் கைதுசெய்ததாக, புடனோவ் நீதிமன்றில் தெரிவித்தார். தற்போதைய தண்டனை கடுமையானது. நாம் மேன்முறையீடு செய்வோம் என புடனோவின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.



பக்தாத்தில் வாகன உதிரிப்பாகக் கடையொன்றில் கொள்ளையிட்டவரெனக் கருதப்படும் ஒருவரை ஈராக்கியப் பொலிஸார் கைதுசெய்யும் காட்சி.

உலகவலம்

## இந்தியாவில் அதிகரிக்கும் எயிட்ஸ்

எயிட்ஸ் வைரஸின் - தாக்கத்துக்குள்ளாவோரின் தொகை இந்தியாவில் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று வெளியான ஓர் அறிக்கையில், 2002 ஆம் ஆண்டு முடிவில் 4.5 மில்லியன் இந்தியர்கள் எயிட்ஸ் தாக்கத்துக்கு உள்ளானதாக இந்தியாவின் தேசிய எயிட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம் தெரிவித்துள்ளது. 2001 இல் இது 4 மில்லியனுக்கும் குறைவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## திசை கருவிகள் செயலிழப்பு பாரிய சரக்கு விமான விபத்து



ஸ்ரான்ஸ்ரெட் விமான நிலையத்தில், பழுதடைந்த திசை வழிகாட்டிக் கருவிகளை உடனடியாகச் சீராக்கத் தவறியதால் கொரிய ஜம்போ ஜெட் விமானம் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான விமானத்தில்- நூற்றுக்கணக்கான கிலோ யுரேனியக் கழிவுகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விமானம் தாஷ்கண்டிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

விமான நிலையத்லிருந்த அதிகாரிகள் விமானம் இறங்குவதற்கான திசைகளை அறிவித்தபோதும், கருவிகளின் செயலிழப்புக்களினால் விமானீ, விமானத்தை தரையிறக்குவதில் சிரமத்தை எதிர்கொண்டதாகவும் - இதுவே விபத்துக்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.

## செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு ஆதரவா?

# அமெரிக்காவின் குற்றச்சாட்டு; சவூதி அரேபியா கண்டனம்!

அமெரிக்கா மீதான, அல்-கொய்டாவின் செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு சவூதி அரேபியாவும் காரணம் என அமெரிக்க கொங்கிரஸ் சபை அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கொங்கிரஸின் 900 பக்க அறிக்கையில்- சவூதி அரேபியா, விமானத்தைக் கடத்தியவர்களுக்கு உதவி புரிந்ததாகவும், அமெரிக்க புலனாய்வுத்துறைக்கு சவூதி ஒத்துழைப்பு வழங்கத்தவறிவிட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 28 பக்கங்கள்கொண்ட இந்தஅறிக்கை - கண்மூடித்தனமாக சவூதிமீதும், அதன் மக்கள் மீதும் சேற்றை வாரியிறைத்துள்ளதாக அமெரிக்காவுக்கான சவூதி தூதுவர் இளவரசர் பண்டர்பின் சுல்தான் கண்டனம் வெளியிட்டுள்ளார். எம்மிடம் மறைப் பதற்கு எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.



அமெரிக்கர்கள் மறக்கமுடியாத நாள்

# கோமா நிலையிலிருந்து இடிஅமீன் மீண்டார்!

முன்னாள் உகண்டா சர்வாதிகாரி இடி அமீன் - தற்போது தேறி வருவதாக அவர் சிகிச்சை பெற்று வரும் சவு,தி ஜெட்டா வைத்திய சாலை வைத்தியர்கள் அறிவித்துள்ளனர். கோமா நிலையிலிருந்து கடந்த புதனன்றுமுதல் அமீன் மீண்டுவிட்டார். இனி செயற்கை சுவாச கருவி தேவையில்லை. எனினும் அவர் அவசர சிகிச்சைப் பிரிவிலேயே இருக்கவேண்டியுள்ளது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம்- அமீன் கோமா நிலையை அடைந்தபோது, அவர் உயிர் பிழைப்பது கடினம் என வைத்தியர்கள் கூறியிருந்தனர். 78 வயதான இடி அமீனின் உடல்நிலை குறித்து எதுவும் உறுதியாக கூறுவதற்கில்லை என்றும், கிங்பைசல்



வைத்தியசாலை அதிகாரிகள் முன்னர் கூறியிருந்தனர்.

இடி அமீனின் சர்வாதிகார ஆட்சி உகண்டாவில் இடம்பெற்றபோது- 4,00,000 இறப்புகளும், காணாமற்போன சம்பவங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம்; திட்டவட்டமான யுத்தநிறுத்த மீறல்!

## கண்காணிப்புக்குழு தமிழ்ச்செல்வனுக்கு கடிதம்

திருகோணமலை, கிண்ணியா-குரங்குப்பாஞ்சான் குளப்பகுதியில் அமைக்கப்பட்டுவரும் முகாமை அகறறும்படி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்கமறுத்தமை-திட்டவட்டமான யுத்த நிறுத்தமீறல் என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுபபாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.

இந்த முகாமை அகற்றுமாறு கண்காணிப்புக்குழு விடுத்த கோரிக்கையை நிராகரித்து - விடுதலைப் புலிகள் கடிதம் ஒன்றை அனுப்பியதையடுத்தே, கண்காணிப்புக்குழுத் தலைவரால் இந்தப் பதில் கடிதம் அனுப்பபப்பட்டுள்ளது.

இந்த முகாமை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளது குறித்து அரசாங்கத்திற்கு கண்காணிப்புக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக, அக்னஸ பிறகர்டோட்ரயர் மேலும் கூறினார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவுடன், நேற்று முன்தினம் மாலை இரண்டு மணிநேரம் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன், இவ்வாரம் நோர்வே செல்லவுள்ளதாகவும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் மேலும் கூறினார்.

## தூத்துக்குடி கப்பல் சேவை அடுத்த மாதம்

(கொழும்பு)

தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை, அடுத்தமாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காக - இந்திய கப்பல்துறை அமைசசர் சத்ருக்கன் சின்ஹா இலங்கை வருவார் எனவும், அமைச்சர் குறிப்பிட்டார்.

## கொழும்பு...

புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், நேற்று ரயில் சேவை எதுவும் பாதிக்கப்படவில்லை.

ரயில்வேத் திணைக்களத்தை அதிகாரசபையாக நேற்று மாற்றியதற்கு ஆட்சேபம் தெரிவித்து, இரத்மலானை ரயில்வே பட்டறையில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதேவேளை- எதிர்வரும் 30 ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவ தாக, 32 ரயில்வேத் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

## பொலிஸ் உத்தியோகத்தரது...

பிட்ட இளைஞனின் தந்தையான பொலிஸ் உத்தியோகத்தரிடம் இவ்விடயத்தைத் தெரிவித்தனர்.

இதன்போது - 'எனது மகன் இனிமேல் ஏதாவது குற்றம் செய்தால், அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுங்கள்' என இளைஞனின் தந்தையான பொலிஸ் உத்தியோகத்தர் தம்மைச் சந்தித்த விடுதலைப் புலிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற சில நாட்களின் பின், பொலிஸ் உத்தியோகத்தரின் மகனான குறிப்பிட்ட இளைஞன், நேற்றும் குருமன் காட்டுப் பகுதியில் இளம் பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட முயன்றவேளை- அதனைக்கண்ட அயலவர்கள், குறிப்பிட்ட இளைஞனைப் பிடித்து, புலிகளிடம் ஒப்படைத்தனர்.

இதன்பின் - புலிகள், இளைஞனின் தந்தையான பொலிஸ் உத்தியோகத்தரை சம்பவ இடத்திற்கு உடனடியாக வரவழைத்து, அவர் முன்னிலையில் இளைஞனை விசாரணைக்கு உட்படுத்தினர்.

பொலிஸ் உத்தியோகத்தர் முன்னர் தமக்கு வழங்கிய உறுதிமொழியை ஞாபகப்படுத்திய புலிகள், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளில் ஈடுபடமாட்டேன் என்ற எழுத்துமூல உறுதிமொழியைக் குறிப்பிட்ட இளைஞனிடமிருந்து அவரது தந்தை முன்னிலையிலேயே பெற்றுக்கொண்டு அவரை விடுவித்தனர். (03)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மருதங்கேணியில் நேற்று திறந்துவைப்பு!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்- 'சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி' நேற்று மருதங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வங்கி, யாழ்.மாவட்டத்தில் திறக்கப்படும் முதலாவது கிளை என்பதுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் திறக்கப்படும் ஏழாவது வங்கியுமாகும்.

மேற்படி வங்கியின் திறப்பு விழா நிகழ்வு - யாழ்.மாவட்ட புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக்கினை, கடற்புலிகளின் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் விநாயகம் ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியினை - கடற்புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் ஏற்றினார். வங்கிக்கான பெயர்ப்பலகையினை, வடமராட்சிக் கிழக்குப் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் ச.திரவியராசா திரைநீக்கம் செய்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பொறுப்பாளர் சந்திரன் நாடாவினை வெட்டி, வங்கியினைத் திறந்து வைத்தார்.

வடமராட்சி கிழக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சிவஞானம் உட்படப் பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 25 முன்பள்ளிச் சிறார்களுக்கு உண்டியல்கள் வழங்கப்பட்டதுடன், சேமிப்புக்கணக்குகளும் திறக்கப்பட்டன. (122)

## லெசோத்தோ அருட்சகோதரி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு நிலைமைகளினை நேரில் கண்டறிவதற்காக, லெசோத்தோ என்ற நாட்டிலிருந்து அருட்சகோதரி ஒருவர் - யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கிறார்.

திடுக்குடும்ப கன்னியர்மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி அஞ்சலீனா என்பவரே, இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். (க)

## தமிழ் மொழி...

மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டமும் ஒரு தலா முதலிடத்தையும் பெற்றுள்ளன.

இதேவேளை - பாடசாலை ரீதியில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வின்சென்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை ஆறு போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று முன்னணி வகிக்கிறது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 5 போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. (லி)

## இடைக்கால....

தொடர்பான திட்ட வரைவினால்- நாட்டில் அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர்,

அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் எழுத்து மூலமும், வாய்மூலமும் வெளியிட்ட விடயங்கள் மட்டுமே தற்போது வெளிவந்திருப்பதாகவும் கூறினார்.

எனினும், அரசாங்கமும் அதிகாரிகளும் வெளியிட்ட கருத்துக்களின்படி பல்வேறு சிக்கல்கள் எழுந்திருக்கின்றன.

அத்துடன்- இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக, மேலதிகமான எந்தவொரு விசேட யோசனையையும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பவில்லையென, அரசாங்கம் ஏன் இப்போது தெரிவிக்கின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த முரண்பாடு காரணமாகவே, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டு மக்களுக்கு ஆற்றவிருந்த உரை - ஒத்திவைக்கப்பட்டது என்றும் - விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர்...

வின் கீழ் பணியாற்றப் போவதில்லை என, எஸ்.பி.திஸநாயக்க அவர்களிடம் பதிலுக்குக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ்மொழித் தின விழாவில் 'கவின் தமிழ்' நூல் வெளியீடு!




(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மொழித்தின விழா - இன்று பி.ப.3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் த. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், முதன்மை விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கி.தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில், வரவேற்புரையை வலயக் கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் நிகழ்த்துவார்.

இதையடுத்து மாகாணத் தமிழ் மொழித்தினவிழா சிறப்பு மலரான 'கவின்தமிழ் - 2003' வெளியீட்டு விழா இடம்பெறும். உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.ஆனந்தராஜ் நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா நூலின் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்.

இதையடுத்து, மாணவர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவன் ஜெயமாருதியின் பேச்சும், மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களின் குழு நடனமும், அக்கரைப்பற்று அல்-ஷிராஜ் மகாவித்தியாலய மாணவி பாத்திமா றிஸ்வானாவின் முஸ்லிம் நிகழ்ச்சியும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி மயூரியின் தனி நடனமும், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மாணவிகளின் இசை நிகழ்ச்சியும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகமும், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மாணவர்களின் நாடகமும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - தமிழ்மொழித் தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வுகளில் - வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் கலந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால நிர்வாக...

பால சிறிசேன விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு, காணி, வருமானம், பொலிஸ் ஆகியவற்றின் அதிகாரங்கள் தொடர்பாக, முரண்பட்ட வகையில் விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் வேறுவேறாக அறிவிக்கப்பட்டுள்ளதாக, இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மிகவும் பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதைக் கருத்திற்கொண்டே, நாட்டின் இறைமையை பாதுகாக்கும் நோக்கில்- இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பாகப் பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு, ஜனாதிபதி இணங்க மறுத்திருக்கிறார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய அதேவேளை- அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் நோக்கிலே, இடைக்கால நிர்வாகசபை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பதே ஜனாதிபதியின் கருத்தாக இருப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இப்பொழுது SLS சான்றிதழ் பெற்றுள்ளது

மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு

ஹினோடே சீமெந்து




வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1532 திகதி: 25.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 2 | 3 | 9 | 8 | 0 | 4 |

## பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத்துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

எதிர்வரும் 29.07.03 அன்று காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.